பக்கங்கள்:15 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 10 வெள்ளிக்கிழமை 26.11.2021 கதிர் 21

**இது ரகசியம் அல்ல!**

ஆட்சித் தலைமைக்கும் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடு அப்பட்டமாகத் தெரியத் தொடங்கியுள்ளது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பகிரங்க உரையும், அதற்கு நேற்று நாடாளுமன்றத்தில் பக்கம்02

# எங்கள் அடி வேறு 'லெவலில்' இருக்கும்



## நாடாளுமன்றத்தில் அரசுக்கு மைத்திரி பகிரங்க எச்சரிக்கை

அடித்தால் நாங்கள் திருப்பி அடிக்கமாட்டோம். அனுதாபம் காட்டுவோம். ஆனால், எங்கள் அடி வேறுவிதமாக இருக்கும் என்பதையும் கூறி வைக்க விரும்புகின்றோம். இது கூட்டணி அரசு. உள்ளக மோதல் ஏற்பட்டால் என்ன நடக்கும் என்பதை முதலில் கற்றுக்கொள்ள வேண்டும்.

– இவ்வாறு அரசின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன எம்.பி. சபையில் நேற்று சீறினார். 2

## மேலும் 27 பேர் மரணம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 27 பேர் சாவடைந்துள்ளனர். 2

## சமரசிங்க இராஜிநாமா



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க 2

## நல்லாட்சியை சகட்டுமேனிக்கு விளாசித் தள்ளினார் மஹிந்த

### காரணங்களையும் பட்டியலிட்டார்



மத்தள விமான நிலையத்தை நெல்லைக் களஞ்சியப்படுத்தும் அளவுக்கு வங்குரோத்து நிலைக்குச் சென்ற நல்லாட்சி அரசு தன்னால் இயன்ற அளவுக்கு டன்களை பெற்றுக் கொண்டதே தவிர அதன் மூலம் செய்தது ஒன்றும் இல்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தத் திட்டத்தின் கீழ் 15

## அமெரிக்க சந்திப்புகள் குறித்து தமிழ்ப் பிரதிநிதிகள் அறிக்கை

அமெரிக்காவிற்குச் சென்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சுமந்திரன் உட்பட்ட சட்ட நிபுணர் குழுவும் உலகத்தமிழர் பேரவை பிரதிநிதிகளும் தமது அமெரிக்க விஜயத்தின் முடிவில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் விடுத்துள்ள குறிப்பின் படி –

நவம்பர் 15 - 22 க்கு இடையில் அமெரிக்க அரசாங்கத்தின் முக்கிய கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அமெரிக்க காங்கிரஸின் உறுப்பினர்களை சந்தித்து பேசினோம்.

இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி செயலாளர் டொனால்ட் லூ, துணை உதவிச் செயலர் கெல்லி கெய்டர்லிங் அம்மையார், ஜனநாயகம் மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் பணியகத்தின் துணைச் செயலர் 15

## யாழில் தீவிரமடையும் டெங்கு; 3 வாரங்களில் 21 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மூன்று வாரங்களில் மட்டும் சுமார் 21 பேர் டெங்கு நோய் தொற்றால் பாதிக்கப்பட்டுயாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று வைத்தியர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், வேலணை, தெல்லிப்பழை மற்றும் பளை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு சிகிச்சை பெற்றுள்ளனர்.

எனவே, 2

## நேற்று 734 பேருக்கு கொரோனா உறுதி

இலங்கையில் மேலும் 734 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் 2

## வடமராட்சியில் பஸ் மோதி பெண் ஒருவர் படுகாயம்!



யாழ்., வடமராட்சி, கரணவாய் தெற்கு – மண்டான் வீதியில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஸும் மோட்டார் சைக்கிளும் மோதி 2

## ஸ்கொட்லாந்து பயிற்சி வசதியை இழந்தது இலங்கைப் பொலிஸ்!

இலங்கைப் பொலிஸாருக்குப் பயிற்சி வழங்கும் செயற்திட்டம் முற்றாகக் கைவிடப்படுவதாக ஸ்கொட்லாந்து காவற்துறை நேற்று அறிவித்துள்ளது. இது சர்வதேச அரங்கில் இலங்கைக்குக் கிட்டியுள்ள புதிய அடியாகக் கருதப்படுகிறது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்வதாக பிரித்தானியா தனது பூகோள மனித உரிமை நிலைமை அறிக்கையில் விமர்சனத்தைத் தெரிவித்திருந்தது.

இலங்கைப் பொலிஸாருக்குப் பயிற்சிவழங்கும் தமது செயற்திட்டத்தை முற்றாகக் கைவிடும் இந்தமுடிவு குறித்து 2

## மாவீரர்களை நினைவுகூர முடியும்!

### கொடிகள், அடையாளங்கள் இல்லாமல் முல்லை நீதிமன்றம் திருத்திய கட்டளை



இறந்தவர்களை நினைவுகூர்வது மானிடப் பண்பு. தடைசெய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினராயினும், அந்த அமைப்பின் கொடிகள், அடையாளங்களைப் பிரதிநிதித்துவம் செய்யாது இறந்தவர்களை நினைவுகூர முடியும்.

– இவ்வாறு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் 2

## தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட இளைஞருக்குக் கொரோனா!

யாழ்., பருத்தித்துறை, முதலாம் கட்டைச் சந்திப் பகுதியில் மரக்காலையில் இருந்து தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை 2 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், தும்பளை மேற்கு, பருத்தித்துறையைச் சேர்ந்த சண்முகராஜா துஷ்யந்தன் (வயது - 21) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா, விசாரணைகளை மேற்கொண்டதுடன், உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டு, அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## வடமராட்சியில் திடீரென உயிரிழந்த வயோதிபருக்குக் கொரோனா உறுதி

உயிரிழந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட வயோதிபருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குச்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை, வடமராட்சியைச் சேர்ந்த செங்கல்வரதராசா சக்திவேல் (வயது - 76) என்பவர், நேற்று முன் தினம் வீட்டில் வழுக்கி விழுந்த நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில், அவருக்குக் கொரோனாத் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொடுத்த பதிலடியும் இவற்றை அம்பலப்படுத்தி நிற்கின்றன.

ஆட்சித் தரப்பு தனது அரச இயந்திரம் மூலம் மக்கள் கருத்துப் பற்றிய ஆய்வு ஒன்றை நடத்தியதாம். அதில், ஈஸ்டர் தொடர் குண்டுத் தாக்குதலில் இப்போதைய ஆளுந்தரப்பினரும் சம்பந்தப்பட்டிருப்பதால்தான் இந்த அரசு குற்றவாளிகளை சட்டத்தின் முன் கொண்டு வரப் பின்னடிக்கின்றது என்ற கருத்து மக்கள் மத்தியில் பரலாக நிலவுவதாக தெரியவந்ததாம்.

அதனை அடுத்தே நேற்று முன்தினம் களனிப் பாலம் திறப்பு நிகழ்ச்சியில் போட்டுப் பிடித்தார் ஜனாதிபதி.

"ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதலின் போது இந்த நாட்டை யார் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள்? அந்த நேரத்தில் எங்களிடம் வலுவான பாதுகாப்பு சேவை இருந்தது. அதனால்தான் எங்களால் போரில் வெற்றி பெற முடிந்தது. அப்போது எங்களிடம் ஓர் வலுவான உளவுத்துறை இருந்தது. அதனால்தான் போருக்குப் பிறகு எதுவும் நடக்கவில்லை.

"ஆனால், அவர்கள் ஆட்சிக்கு வந்து, புலனாய்வுப் பிரிவை பலவீனப்படுத்தி, போர் வீரர்களை அழித்து, அவர்களின் மனநிலையைச் சிதைத்து, தேசியப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை கொடுக்காமல் இந்த நாட்டை ஆள வேண்டும் என்று செயற்பட்டமையால்தான் ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

"ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்தார்கள். குற்றவாளிகள் யார் என்பதை ஆணைக்குழு தெளிவாகக் கூறியுள்ளது. இதற்கு அப்போதைய ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை பொறுப்பேற்க வேண்டும் எனத் தெளிவாகக் கூறியுள்ளனர்.

"இது தொடர்பில் நாடாளுமன்றம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளோம்.

"கடந்த அரசாங்கத்தைப் போன்று அரசியல் பழிவாங்கல்களில் நாம் ஈடுபடமாட்டோம். ஒருபுறம், நீதித்துறையின் சுதந்திரத்தைக் கேட்பவர்களைத் தண்டிக்கச் சொல்ல முடியாது. நீதித்துறை அதைச் செய்கிறது. அதில் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது. அதனை உரிய காலத்தில் செய்ய வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு வந்து இவற்றுக்கு காரணமானவர்களின் குடியியல் உரிமைகளை இல்லாதொழிக்கலாம். அந்தத் தவறுகள் மீண்டும் நடக்காத வகையில் செய்யலாம். அதைத்தான் கேட்கிறோம். அவர்களுக்கும் நாங்கள் தயார் என்பதை இந்த இடத்தில் கூறுகிறோம்." – என்றார் ஜனாதிபதி கோட்டாபய.

குடியுரிமையைப் பறிப்பது தொடர்பான பேச்சு தன்னைப் பற்றியது என்பதை உணர்ந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நாடாளுமன்றத்தில் அதற்குப் பதிலடி தந்தார்.

குடியுரிமையைப் பறிப்பதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும். இந்த ஆட்சிப் பீடத்துக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருக்கின்றது என்றால் அதில் பதினான்கு எம்.பிக்கள் சு.கவினர் என்பதை ஆளும் தரப்பு மறந்து விடக்கூடாது. என்னுடன் முட்டினால் அரசு சரியும் நிலைவரையான நெருக்கடிள் வரும்." – என்ற சாரப்பட அவர் பதிலடி எச்சரிக்கை கொடுத்திருக்கின்றார்.

சபாஷ். சரியான போட்டி...!

★ ★ ★

இலங்கையின் ஆட்சிப் பீடத்துக்கு சர்வதேச அரங்கில் நாசூக்காக ஓர் அடி கொடுத்திருக்கின்றது ஜோ பைடனின் அமெரிக்க அரசு.

உலகில் உள்ள 110 நாடுகளை அழைத்து நிகர்நிலை மூலமாக ஜனநாயக உச்சி மாநாடு ஒன்றை அமெரிக்கா நடத்துகின்றது.

தென்னாசிய வட்டகையில் இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, நேபாளம் ஆகிய நாடுகளை எல்லாம் அழைத்துள்ள அமெரிக்கா, இலங்கைக்கு அழைப்பு அனுப்பவேயில்லை என்று கூறப்படுகின்றது.

சீனா, ரஷ்யா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள்தான் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்படவில்லை. அந்த நாடுகளில் நிலவும் ஜனநாயக நிலைமைதான் இப்படி அழைப்பு அனுப்பப்படாமைக்குக் காரணமோ? எது, எப்படி என்றாலும், அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு சர்வதேச அரங்கில் இலங்கையின் அந்தஸ்துக்கு ஓர் இழுக்கு என்பது மறைக்கப்பட முடியாத உண்மை.

★ ★ ★

அமெரிக்கா, பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளின், இந்தச் சுற்றுலாவின் கடைசி நிகழ்ச்சி இன்றாகும்.

கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. – சாணக்கியன் எம்.பி. ஆகியோர் இன்று பிற்பகல் வெளிவிவகார அமைச்சில் கலந்துரையாடல்களில் பங்கு பற்றவுள்ளனர். பெரும்பாலும் பிரிட்டனின் வெளிவிவகாரம், பொது நலவாயம் மற்றும் அபிவிருத்தி விவகார அமைச்சர் லிங்ட்ரஸ் அம்மையாரை அவர்கள் சந்திக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கனடாவில் சுமந்திரனின் பகிரங்கக் கூட்டத்தைக் குழப்பியமை போன்று இன்று சுமந்திரன் – சாணக்கியன் குழுவினர் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சுக்குச் செல்லும் போது அமைச்சு வாசலில் ஒன்று கூடி அவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வாருங்கள் என்று ஒரு குழு அழைப்பு விடுத்திருக்கின்றது. இன்று மாலையில் விவரம் தெரியும். பார்ப்போம்.

– மின்னல் –

---

## ஸ்கொட்லாந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் உள்ள பிரித்தானிய தூதரகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பிரிட்டன் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைப் பொலிஸார் மேற்கொள்ளும் சித்திரவதைகள், சட்டத்திற்கு புறம்பான கொலைகள் மற்றும் உயர்அதிகாரிகளின் முறைகேடுகள் பற்றிய தகவல்களை மையப்படுத்தி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## மேலும் 27 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்தச் சாவுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 19 ஆண்களும், 8 பெண்களும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் சாவடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 232 ஆக உயர்வடைந்துள்ளது.

---

## வடமராட்சியில் பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விபத்துக்குள்ளானதில் இளம் பெண் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளானார்.

வாதரவத்தைப் பகுதியைச் சேர்ந்த எஸ்.சிவகலா (வயது – 30) என்பவரே இவ்வாறு படுகாயங்களுக்கு உள்ளானார்.

படுகாயமடைந்தவர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில், நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## எங்கள் அடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும்போதே அவர் இந்தப் பதிலடிகளை வழங்கினார்.

மஹிந்தானந்த அவரின் நிலைக்கு ஏற்றவாறு பேச வேண்டும் என்றும் மைத்திரிபால கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி என்ற முறையில் என்னை குறிவைத்தால் எதையும் கூறுவதற்கு சபாநாயகரே எனக்கும் உரிமை உண்டு. அடித்தால் நாங்கள் அடிப்போம். ஆனால், நாங்கள் நீங்கள் சொல்லும் வழியில் அல்ல, வேறு வழியில் அடிப்போம்.

எனது வருடாந்த வரவு – செலவுத் திட்டத்தையும் தற்போதைய ஜனாதிபதியின் வரவு – செலவுத் திட்டத்தையும் எடுத்து நான் தேவையில்லாமல் செலவு செய்ததாகக் கூறுகிறார்கள்.

அவர்கள் கண்ணாடி வீடுகளில் அமர்ந்து கற்களை வீசுவது எனக்கும் பிடிக்கவில்லை. அதற்குக் காரணம், முன்னாள் ஜனாதிபதிகள் எப்படிச் செலவு செய்தார்கள், எப்படிப் பயணம் செய்தார்கள், எப்படி வாகனங்களைப் பயன்படுத்தினார்கள், விமானங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன, ஹெலிக்கொப்டர்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்று எல்லோருக்கும் தெரியும். நான் 2015 முதல் அவர்களுக்கு ஒரு உதாரணத்தை ஏற்படுத்தினேன்.

சண்டைக்குப் போனால் என்ன காயங்கள் ஏற்படும். இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்றால் என்ன, அரசு என்றால் என்ன என்பதை இன்னும் ஆழமாகவும், சிக்கலானதாகவும், புத்திசாலித்தனமாகவும் நாம் சிந்திக்க வேண்டும்.

நாம் இன்னும் பன்மைத்துவமாக சிந்திக்க வேண்டும். எனவே, அரசின் மூன்றில் இரண்டு பங்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 எம்.பிக்களின் கைகளில் உள்ளது. அந்தவகையில், கடந்த 50 – 60 வருடங்களில் அரசுக்குள்ளேயே சண்டையிட்டால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை முன்னைய அரசுகள் நிரூபித்துள்ளன.

11 கூட்டணி கட்சிகள் இணைந்து அமைத்த ஆட்சி இது. ஆளும் கட்சியில் பிரச்சினைகளை உருவாக்காமல் இன்னும் கண்ணியமாக நடந்து கொள்ளுங்கள். அந்த நட்பைப் பேணுவோம். நாம் கீழே செல்ல வேண்டியதில்லை – என்றார்.

---

## யாழில் தீவிரமடையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போதுள்ள மழையுடனான காலநிலையில் டெங்குத் தொற்று பரவாமல் இருப்பதற்குச் சூழலை சுத்தமாக வைத்திருப்பது அவசியம். நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதாலும், வீதிகளில் கழிவுகளைப் பொறுப்பற்ற விதத்தில் வீசாதிருப்பதாலும் டெங்குத் தொற்றிலிருந்து எம்மையும் சமூகத்தையும் பாதுகாக்கலாம் – என்றார்.

---

## சமரசிங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனது இராஜிநாமாக் கடிதத்தை நேற்று நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் ஒப்படைத்துள்ளார்.

அமெரிக்காவுக்கான இலங் கைத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளதை அடுத்தே அவர் இவ் வாறு தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

## வடமராட்சியில் திடீரென...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்று உறுதி செய்யப்பட்டது.

நேற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குச் சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா, விசாரணைகளை மேற்கொண்டு, உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

---

## இறந்தவர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் தடைசெய்யப்பட்ட இயக்கத்தினுடைய நிகழ்வு ஒன்றாக நினைவுபடுத்தக் கூடியதாக நினைவுகூரல்களை மேற்கொள்ளாது இறந்தவர்களுக்குப் பொதுவான நினைவுகூரல்களை மேற்கொள்ள முடியும் என்று மாவீரர் நாள் தடைக் கட்டளையை நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் திருத்திய கட்டளையாக்கி உத்தரவிட்டுள்ளது.

கடந்த 17 மற்றும் 23 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தின் 7 பொலிஸ் பிரிவுகளில் மாவீரர் நாளை நினைவுகூர வழங்கப்பட்டிருந்த மாவீரர் நாள் தடை உத்தரவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், பிரதேச சபை உறுப்பினர்களான சின்னராசா லோகேஸ்வரன், குகனேசன் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர் முல்லை ஈசன் ஆகியோர் சார்பாக சட்டத்தரணி கேசவன் சயந்தன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழாம் மூலம் நகர்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிவான் நீதிமன்ற நீதிவான் ரி.சரவணராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்தத் திருத்திய கட்டளையை அவர் உத்தரவிட்டுள்ளார்.

முல்லைத்தீவு தலைமை பொலிஸ் நிலையம், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம், மல்லாவி, ஒட்டுசுட்டான், மாங்குளம் ஆகிய 5 பொலிஸ் பிரிவுகளில் மாவீரர் நாள் நினைவு நிகழ்வை மேற்கொள்ள முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தால் தடை உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

இந்த ஐந்து பொலிஸ் பிரிவுகளில் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த தடை உத்தரவை திருத்திய கட்டளையாக்கி முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டத்தரணி கேசவன் சயந்தன் தலைமையில் சட்டத்தரணிகளான கணபதிப்பிள்ளை கணேஸ்வரன் வி.எஸ்.எஸ்.தனஞ்சயன், ருஜிக்கா நிதியானந்தராஜா ஆகியோர் நீதிமன்றில் சமர்ப்பணங்களை முன்வைத்து வாதங்களை மேற்கொண்டனர்.

வாதங்களைக் கேட்ட மன்று ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த தடை உத்தரவை திருத்திய கட்டளையாக்கி உத்தரவிட்டுள்ளது.

---

## நேற்று 734 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 60 ஆயிரத்து 345 ஆக எகிறியுள்ளது.

அவர்களில் 17 ஆயிரத்து 713 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 471 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 28 ஆயிரத்து 400 ஆக அதிகரித்துள்ளது.

JSAC

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"பெண்கள் பாதுகாப்பை உணர வைப்பது ஒவ்வொருவரினதும் கடமை. அனைவரும் இணைந்து பாதுகாப்பான சமத்துவமான சமூகத்தை உருவாக்குவோம்."

16 2021

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

அருந்ததியின்

# வரன் தேடுவோம் வாருங்கள்



## திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி

ஆயிரக்ககணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு அரச தனியார் தொழில்புரியும் மணமக்க-ளிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்.இந்நிகழ்விற்கு எமது ஜோதிடர் வரவுள்ளதால் உங்களுக்கு பொருத்தமான சாதகங்களை பெற்று உடன-டியாகவே பொ ருத்தம் பார்த்துக்கொள்ள முடியும்.

**யாழ்ப்பாணம்**
**28/11/2021 | 9.00 a.m -12.00 a.m**

## திவ்ய மஹால்

**1001, K.K.S Road, Vannarpannai, Jaffna**

**இந்நிகழ்வில் சிறப்பு பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது**

600 மணமக்கள் விபரங்களுடன்
அருந்ததி திருமண இதழ் 25 னை
இந்நிகழ்வில் பெற்றுக்கொள்ளலாம்



**அருந்ததி பிரைவட் லிமிட்**
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்
www.arunthathee.com | +94 777 164 524

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வரலாற்றுப் பிறப்பாக்கம்

தலைவர் பிரபாகரனின் பிறந்த தினம் இன்று. உலகெங்கும் வாழும் தமிழர்கள் அவர் நினைவுடன் இன்றைய தினத்தை அனுஷ்டிப்பர். அது வழமை.

"அவர் ஒழுக்கமான ஒரு தலைவராக இருந்தார். அவர் ஒரு வித்தியாசமான தலைவராக இருந்தார். பலரும் கற்க வேண்டிய நற்பண்புகள் அவரிடம் இருந்தன." – என்று இலங்கை இராணுவத்தின் மூத்த தளபதிகளில் ஒருவராக இருந்தவரும், தற்போதைய பாதுகாப்புச் செயலாளருமாகிய ஜெனரல் கமால் குணரட்ண போன்றவர்களே குறிப்பிடக் கூடியளவுக்கு வாழ்ந்து காட்டியவர் பிரபாகரன்.

"நாம் இனத் துவேஷிகள் அல்லர். போர் வெறி கொண்ட வன்முறையாளர்களும் அல்லர். நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ, விரோதிகளாகவோ கருதவில்லை. சிங்கள மக்களின் பண்பாட்டை கௌரவிக்கிறோம். சிங்கள மக்களின் தேசிய வாழ்வில், அவர்களது சுதந்திரத்தில், நாம் எவ்விதமும் தலையிட விரும்பவில்லை. நாம் எமது வரலாற்றுத் தாயகத்தில் ஒரு தேசிய மக்கள் இனம் என்ற அந்தஸ்துடன், நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவத்துடன் வாழ விரும்புகின்றோம்." – என்றார் தலைவர் பிரபாகரன்.

தமிழர் தேசிய அரசியலில் பிரபாகரனின் தோற்றம் என்பது வரலாற்றுப் பிறப்பாக்கம். இலங்கைத் தமிழர்களின் சரித்திரப் பட்டறிவே அப்பாத்திரத்தை அத்துணை வடிவில் பெற்றெடுத்துப் பரிணமிக்கச் செய்தது என்பதுதான் உண்மை.

பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகளின் தமிழர் விரோத அடக்குமுறை நடவடிக்கைகளும் வன்முறைப் போக்குகளுமே, சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேல் அஹிம்சை நெறியில் – காந்தீய மார்க்கத்தில் – அறவழியில் – போராடிய தமிழ் மக்களை – குறிப்பாகத் தமிழ் இளைஞர்களை – வன்முறையை வன்முறையால் எதிர்கொள்ளும் திசையை நோக்கி நெட்டித் தள்ளின.

பௌத்த, சிங்கள அரசுகளின் அடக்கு முறைக் கருவிகளாக – கட்டமைப்புகளாக – பொலிஸும் முப்படைகளும் தமிழ் மக்கள் மீது ஏவிடப்பட்ட போது, வன்முறையை எதிர்கொள்ளும் வன்முறையாக தமிழர்கள் மத்தியில் ஆயுதப் போராட்டம் முகிழ்ந்தது. அதன் பெறுபேறே தலைவர் பிரபாகரனின் தோற்றமும் வளர்ச்சியும் என்பது வெளிப்படையானது.

மாறி, மாறி ஆட்சிப் பீடம் ஏறிய பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகளின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கும், ஈவிரக்கமற்ற கொடூரங்களுக்கும் தமிழ் இளைஞர்கள் நேரடியாகப் பலிக்கடாவாக்கப்பட்டார்கள். அதனாலேயே தமிழ் இளைஞர்களிடையே தீவிரவாதக் கடும் போக்கும், வளைந்து கொடாத எதிர்ப்புணர்வும், அசாத்தியமான துணிச்சலும் கொண்ட வன்முறைப் பாங்கு தலை தூக்கியது.

பௌத்த, சிங்கள அரசுகளின் அடக்குமுறை காரணமாக மொழியை, கல்வியை, வேலைவாய்ப்பை, ஏன் இருப்பையே, தொலைக்க வேண்டியவர்களானார்கள் தமிழ் இளைஞர்கள். அதனால் நிரந்தரமான விரக்தியையும், சூனியமான எதிர்காலத்தையும், அவநம்பிகையான வாழ்வியலையும், எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குள் அவர்கள் தள்ளப்பட்டனர்.

அரச ஒடுக்குமுறை தீவிரமடைந்த அந்தக் கால கட்டத்தில் அதை எதிர்கொள்வதற்கான ஒரே வழியாக ஆயுதப் போராட்டம் அவர்கள் மீது திணிக்கப்பட்டது. பௌத்த – சிங்கள அரசுகளின் எல்லையற்ற வன்முறைப் பிரயோகமும் உச்ச அடக்குமுறையும் பிரபாகரன் என்ற தலைவனின் வரலாற்றுப் பிறப்பாக்கத்துக்கு வழி செய்தன.

அது தெரிந்தும், புரிந்தும், அறிந்தும் கூட அது தெரியாதமை போல – புரியாதமை போல – பௌத்த, சிங்கள ஆட்சித் தலைமைகள் இன்னும் நடிப்பதுதான் நாட்டின் பெரும் துன்பியல் நிலைமையாகும்.

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் வெளிவராத பல விடயங்கள் உள்ளன

## பேராயர் கர்தினால் ஆண்டகை கூறுகிறார்



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் வெளிப்புற தோற்றத்தில் காண்பதை விட அதன் உட்புற தோற்றத்தில் அதிக வேலைப்பாடு இருப்பதாக நாங்கள் தற்போது உணர்ந்து வருகிறோம் என பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நாடகத்தில் நடிக்கும் நடிகர்களைப் போன்று கிரீடத்தை அணிந்து கொண்டு செயற்படாது மக்களின் துயரங்களுக்காகக் குரல் கொடுக்க முன்வர வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதனைச் செய்ய முடியாவிட்டால் அதனைக் கழற்றி விட்டு வெளியேற வேண்டும் என்றும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வாதுவையிலிருந்து தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆணைக்குழு வின் இறுதி அறிக்கையைஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இந்தத் தாக்குதலின் வெளிப்புற தோற்றத்தில் காண்பதை விட அதன் உட் புற தோற்றத்தில் அதிக வேலைப்பாடு இருப்பதாக நாங்கள் தற்போது உணர்ந்து வருகிறோம்.

நாம் யாரையும் பழி வாங்க விரும்பவில்லை. ஆனால் உண்மையை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தத் தாக்குதலை அறிந்து உயர் பதவியில் இருப்போர் மற்றும் வாக்குறுதிகளை வழங்கியோர் இப்போது எதுவும் தெரியாதது போல் இருக்கிறார்கள்.

அதுதான் எம்மால் தாங்க முடியாத விடயம் என்றும் இதற்கு அவர்களின் பங்கு இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனவே இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை அனைத்து கத்தோலிக்கர்களும் ஒன்றிணைந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

# அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்கள் துறைமுகத்தில் தேக்கம்

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய சுமார் ஆயிரம் கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக்கிடக்கின்றன என அமைச்சர் பந்துல குணவர்தன அமைச்சரவைக் கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார் என தெற்கு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கிழங்கு, பருப்பு, உப்பு, சீனி, நெத்தலி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருளகள் இவ்வாறு தேங்கிக் கிடக்கின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க டொலருக்கான பற்றாக் குறையே இவ்வாறு உணவுப் பொருள்கள் துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதற்குக் காரணம் எனவும் தெரிவித்துள்ளார்.

சந்தையில் பொருள்களின் விலை கட்டுப்பாடின்றி அதிகரிப்பதற்கும் அதுவே காரணம் என சுட்டிக் காட்டியுள்ளார். டொலருக்கான பற்றாக்குறை பாரிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளதாக அமைச்சரவைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கு கொள்கலன் முனையம் அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தம் சீனாவின் வசம்!

கொழும்பு துறைமுக கிழக்கு கொள்கலன் முனையத்தின் இரண்டாம் கட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக சைனா ஹார்பர் இன்ஜினியரிங் கம்பனி லிமிடெட் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் முழுமையாக இயக்கப்படும் முனையமான கிழக்கு கொள்கலன் முனையத்தைக் கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்வதற்காக, இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் இரண்டாம் கட்டத்தின் சிவில் வேலைகளுக்காக சர்வதேச போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளதுடன், 03 விலை முறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த விலைமுறிகள் தொடர்பாக அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய இந்த ஒப்பந்தம் அக்ஷன் இன்ஜினியரிங் கம்பனி மற்றும் சைனா ஹாபர் இன்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட் கூட்டு வணிகத்துக்கு வழங்குவதற்காக துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை, முன்னதாக ஜப்பானுடன் மூலோபாய கிழக்கு கொள்கலன் முனையத்தை உருவாக்க இந்தியா முன்வந்தது. எனினும் தற்போதைய அரசாங்கம் அதற்குப் பதிலாக மேற்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்க முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை – 2021

"குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டு பண்ணும். என்னால் செய்யக் கூடிய சிறிய பணி மரங்களை நடுவது தான்."

- வங்காரி மாதாய்
(அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)



# மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதித்து வழங்கிய கட்டளையை மீளப்பெற யாழ்.நீதிவான் நீதிமன்று மறுப்பு

மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதித்து வழங்கிய கட்டளையை மீளப் பெற யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

தடை உத்தரவு வழங்கி கட்டளையாக்கப்பட்டது நிரந்தரமானது என்றும் அதனை பிரதிவாதிகள் ஆட்சேபனைக்கு உள்படுத்தவேண்டுமாயின் மேல் நீதிமன்றை நாடுமாறும் யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம் அறிவுறுத்தினார்.

கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், சார்பில் கடந்த வெள்ளிக்கிழமை முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு அனுமதியளித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியது.

முன்னர் கோப்பாயில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த இடத்தில் அமைந்துள்ள இராணுவத்தின் 512 பிரிகேட் தலைமையகத்துக்கு முன்பாகவும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சூழலிலும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய எல்லையிலும் மாவீரர் நாளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 106ஆவது பிரிவுக்கு அமையவும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் படியும், இந்த நிகழ்வை நடத்துவது குற்றம் என்றும் இதனைத் தடை செய்யுமாறும் பொலிஸார் கோரியிருந்தனர்.

இந்த விண்ணப்பங்கள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதிவான் வி.ரி. சிவலிங்கம் முன்பாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதன்போது நவம்பர் 21ஆம் திகதி தொடக்கம் வரும் 28ஆம் திகதிவரை ஒரு வாரத்துக்கு மாவீரர் நாள் நினைவேந்தலை நடத்தத் தடை உத்தரவு நீதிமன்றால் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிகள் மற்றும் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டோர் சார்பிலான சட்டத்தரணிகள் நகர்த்தல் பத்திரம் சேர்ப்பித்து தடை உத்தரவுக் கட்டளை மீள் பரிசீலனை செய்யக் கோரினர்.

அதனடிப்படையில் புதன்கிழமை வழக்கு அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் சார்பிலான சமர்ப்பணங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது. பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

'ஒரே நாடு; ஒரே சட்டத்தின்' கீழ் மாவட்டத்தின் ஏனைய நீதிவான் நீதிமன்றங்கள் வழங்கியதன் அடிப்படையில் பொலிஸாரின் விண்ணப்பத்தை நிராகரிக்கவேண்டும் என்று சமர்ப்பணத்தில் சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர்.

அதற்கு பொலிஸார் கடும் ஆட்சேபனையை முன்வைத்து சமர்ப்பணம் செய்தனர்.

இருதரப்புசமர்ப்பணங்களைஆராய்ந்தயாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம், தடை உத்தரவு கட்டளையை மீளப் பெற முடியாது என்றும் பிரதிவாதிகள் சார்பிலான ஆட்சேபனையை மேல் நீதிமன்றில் முன்வைத்து வாதாடுமாறும் அறிவுறுத்தினார்.



## ஹற்றன் – டிக்கோயாவில் விபத்து ஒருவர் உயிரிழப்பு; மூவர் காயம்

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன்,மூவர் காயமடைந்துள்ளனர்.

ஹற்றன் – டிக்கோயா பகுதியிலிருந்து டிக்கோயா பெரிய மணிக்வத்தை பகுதிக்கு சென்றுகொண்டிருந்த ஓட்டோ புதன்கிழமை இரவு பெரிய மணிக்வத்தைதோட்டத்துக்குச்செல்லும் வீதியில் வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஓட்டோசாரதிக்குஓட்டோவைக் கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவே இந்த விபத்து நேர்ந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது உயிரிழந்தவர் டிக்கோயா பெரிய மணிக்வத்தை பகுதியைச் சேர்ந்த சுந்தராஜ் (வயது - 65) மூன்று பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் டிக்கோயா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேதபரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், படுகாயமடைந்த மூவரும் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## அச்சுறுத்துகிறது எலிக் காய்ச்சல்
## 5,275 நோயாளிகள் அடையாளம்

2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இம் மாதம் 17 ஆம் திகதி வரை நாட்டில் 5 ஆயிரத்து 275எலிக்காய்ச்சல்நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனத் தொற்றுநோயியல்பிரிவுதெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் 844எலிக்காய்ச்சல்நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என இந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த காலப் பகுதியில் இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான எலிக்காய்ச்சல் நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

இவர்களின் எண்ணிக்கை 706 ஆகும். மேலும் காலி மாவட்டத்தில் 643 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 600 பேரும், கேகாலை மாவட்டத்தில் 418 பேரும் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திருகோணமலைமாவட்டத்தில்மிகக்குறைந்த எண்ணிக்கை, எலிக் காய்ச்சல் நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இவர்களின் எண்ணிக்கை 4.

2020 ஆம் ஆண்டில் 8 ஆயிரத்து 579 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும், கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடம் எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சிறிதளவு குறைவடைந்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

## வல்வெட்டித்துறை தீருவில் திடலை மாவீரர் நாளுக்கு வழங்க முடியாது
### நகரசபை கைவிரிப்பு

வல்வெட்டித்துறை தீருவில் திடலை மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு வழங்க வேண்டாம் என வல்வெட்டித்துறை பொலிஸார் கோரியதால், திடலில் நிகழ்வு நடத்துவதற்கு அனுமதி வழங்க முடியாது என வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ச. செல்வேந்திரா தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், மாவீரர் நாளான எதிர்வரும் 27ஆம் திகதி தீருவில் மைதானத்தில் நிகழ்வுகளை முன்னெடுக்க நகர சபையிடம் அனுமதி கோரி இருந்தார்.

அதற்குப் பதில் அளிக்கும் முகமாக நகரசபைத்தலைவரால், 'இம்மாத இறுதி வரை தீருவில் மைதானத்தில் எந்த நிகழ்வுகளையும் நடத்துவதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என வல்வெட்டித்துறை பொலிஸாரால் தனக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமையால், தங்கள் கோரிக்கை தொடர்பில் சாதகமாக பரிசீலிக்க முடியாது என்பதைத் தெரிவித்து கொள்கிறேன் என' எழுத்து மூலம் எம்.கே.சிவாஜிலிங்கத்திற்கு அறிவித்துள்ளார்.

## கார்த்திகைப் பூ தொடர்பில் இந்திய தூதரகம் விளக்கம்

யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள சங்கிலியன் பூங்காவில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற பசுமைக் கண்காட்சி தொடர்பில் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதரகம் தெளிவுபடுத்தல் ஒன்றை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள சங்கிலியன் பூங்காவில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் கார்த்திகைப் பூ சூடிய விடயம் தொடர்பில் இணையத்தளங்களில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிகழ்வு என திரிவுபடுத்தப்பட்டு செய்திகள் வெளியான நிலையிலேயே இந்தியத் தூதரகத்தினால் அதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டு அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் –

மரக்கன்றுகள் விநியோக நிகழ்வு தொடர்பான பல தவறான செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தமை கவனத்துக்கு வந்தன.

யாழ். இந்தியத் துணைத் தூதுவர் அவர்கள், அழைப்பின் பேரில் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார். அத்தகைய பங்கேற்பு அமைப்பாளர்கள் அல்லது அவர்களின் செயல்களுடன் உத்தியோக பூர்வ நிகழ்ச்சிக்கு வெளியே, எந்த வகையிலும் சம்பந்தப்படவில்லை. இது தொடர்பில் அவருக்கு எந்த முன் அறிவித்தலும் வழங்கப்படவில்லை. – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி, பிரதமர் பாதுகாப்பு வாகனங்களுக்கு அதிவேக நெடுஞ்சாலையில் கட்டணங்கள் இல்லை

அதிவேக நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தும் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பாதுகாப்பு தொடரணிக்குச் சொந்தமான அனைத்து வாகனங்களும் இலவசமாக பயணிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவினால் இதுகுறித்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், நோயாளர்களை ஏற்றிச் செல்லும் அனைத்து நோயாளர் அம்புலன்ஸ்களும் அதிவேக நெடுஞ்சாலையை இலவசமாகப் பயன்படுத்த முடியும் எனவும் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## யாழில் தீவிரமடையும் டெங்கு 3 வாரங்களில் 21பேர் பாதிப்பு!

யாழ்.மாவட்டத்தில் 3 வாரங்களில் மட்டும் சுமார் 21 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என வைத்தியர் சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட சுகாதார நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், வேலணை, தெல்லிப்பழை, பளை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு சிகிச்சை பெற்றுள்ளனர்.

எனவே தற்போதுள்ள மழையுடனான காலநிலையில் டெங்கு தொற்று பரவாமல் இருப்பதற்கு சூழலை சுத்தமாக வைத்திருப்பது அவசியம், நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதாலும், வீதிகளில் கழிவுகளை பொறுப்பற்ற விதத்தில் வீசாதிருப்பதாலும் டெங்குத் தொற்றிலிருந்து எம்மையும் சமூகத்தையும் பாதுகாக்கலாம் என மேலும் தெரிவித்தார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 203

**521. அமெரிக்கா போர்க்காலங்களில் மஹிந்தாவுக்கு ஆதரவு தந்து, இனவழிப்பில் பங்குதாரியாக இருந்தது. அது, தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வுப் பொதியை பெற்று தர உண்மையான, நம்பகமான நண்பனாக இருக்குமா?**

கொடுக்கப்பட்ட ஆயுத உதவிகளை விட்டாலும், பயிற்றுவித்த தந்திரோபாயங்களை விலத்தினாலும், அமெரிக்காவில் ஓர் இடைக்கூட்டத்தை ஏற்படுத்தி, அதற்கு விடுதலைப் புலிகளை அழைக்காமல் விட்டு, பேச்சு வார்த்தையை ஓரங்கமாக்கியது. பின்னர் ஐரோப்பிய யூனியன் நாடுகள் மீது அழுத்தத்தைப் பிரயோகித்து, விடுதலைப் புலிகளை பயங்கரவாத



பட்டியலில் அவர்களைச் சேர்க்கச் செய்து, சர்வதேசத்தையே திசை திருப்பியமை போன்றவற்றை மறந்து விடவும் முடியாது, மன்னிக்கவும் முடியாது.

ஸ்ரீலங்கா அரசு வட கிழக்கின் எழுபது வீதப் பகுதிகளை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்கு இழந்து, அவர்கள் ஒரு நிழல் அரசை நடத்தியபோதுதான், 23 பெப்ரவரி 2003 இல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தனர். நோர்வே ஊடாக அமெரிக்கா இதனை அறிந்தே இருந்தது. ஆனாலும் அவை எல்லாவற்றையும் அதுவும் சேர்ந்து தவிடாக்கியது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்து 1.4 'விடுதலைப் புலிகளும் ஸ்ரீலங்கா படைகளும் எந்த இடங்களில் தங்களது படைகளை நிலை நிறுத்தியிருந்தனரோ அவர்கள் தங்கள் தங்களது நிலையில் இருக்கலாம்' என ஏற்றிருந்தது. ஒத்துக்கொள்ளப்பட்ட இந்த நிலைப்பாட்டிலிருந்துதான் விடுதலைப் புலிகளும் தங்களுக்கு ஸ்ரீலங்காவினதும் சர்வதேசத்தினதும் ஆமோதிப்பு உண்டு எனத் தங்கள் கட்டுப்பாடுள்ள பகுதிகளில் தமிழீழ புலிக்கொடிகளைப் பறக்கவிட்டு, பொலிஸ், நீதி, சுங்க நிர்வாகம் போன்றவற்றை அமைத்து சுய நிர்வாகத்தை மேலெடுத்தார்கள்.

இந்தியாவின் அனுமதியின்றி இன்னொருநாட்டுடன் தனது சுதந்திரத்தில் ஸ்ரீலங்கா எந்தவிதமான இராணுவ ஒப்பந்தங்கள் மேற்கொள்ளக் கூடாது என்பதும், ஸ்ரீலங்காவும் இந்தியாவும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் வாழும் எல்லாவின மக்களின் பாதுகாப்புக்கும் பொறுப்புள்ளவர்கள் என்பது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஒரு சரத்து. ஆனால் இருவரும் நடத்தியதோ வேறு.

சந்திரிகாவினூடான பேச்சுவார்த்தைகளில் சமஷ்டி அரசு முறைக்கான இணக்கம் காணப்பட்டு சுனாமி மீளமைப்புப் பணிகளில் விடுதலைப் புலிகளும் அரசும் இணைந்து செயல்படுவது என ஒப்பந்தமும் இரு பகுதியாராலும் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

ஆனால் சிங்கள பெரும்பான்மை கோத்தில் அதனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுடன் ஒப்பந்தம் வைத்து, ராஜபக்ஷ தேர்தலில் வென்று, தமிழ்தேசம் என்பதையும் சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலையும் எதிர்த்தார். இவை ஒஸ்லோ சமாதானப் பேச்சில் முன்னைய அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் வென்று பதவிக்கு வந்ததும் தமிழ் தேசமென்ற அறிகுறிகள் கொண்ட சமஷ்டி அமைப்பையோ சுனாமி மீளமைப்புக்கான இணைந்த அதிகார கட்டமைப்பையோ தான் அனுமதிக்கப் போவதில்லை என அறிவித்தார்.

சுனாமி நிதிகளை விடுதலைப் புலிகளோடு இணைந்து செலவழிப்பதும் மறுக்கப்பட்டு "ஜயலங்கா" என்ற நிதியமே அவற்றைப் பராமரிக்கும் என அறிவிப்புக்கள் வந்தன. இந்த நடவடிக்கைகளைப் பார்த்து மனம் வருந்திய முன்னைய ஜனாதிபதி சந்திரிக்கா "இதனை நான் எனது இருதயத்தின் அடித்தளத்தில் இருந்து சொல்கிறேன். எனது தேகத்தில்



ஒவ்வொரு நாடி நரம்புகளிலும் உணர்கிறேன். சுனாமி நிதிபகிர்தலுக்காக உருவாக்கப்பட்ட PTOMS கட்டமைப்பைஎதிர்ப்பவர் ஒவ்வொருவரும் வெகுவிரைவில் தாய்நாட்டின் மிகப் பெரிய துரோகியாக அறியப்படுவார்கள். உண்மையில் தீர்வுப் பொதியின் ஆரம்பமே அது" என ஒரு கருத்தரங்கில் அறிவித்தார்.

சுனாமியினால் வட கிழக்குப் பகுதிகள் எவ்வளவிற்குப் பாதிக்கப்பட்டிருந்தன, மீளமைப்புக்கு எந்தளவில் தமிழ் மக்கள் சர்வதேசத்தை நம்பியிருந்தார்கள் என்பவற்றை



அமெரிக்கா அறிந்திருந்தது. அதற்கு நிதி தர இணங்கிய நாடுகளின் ஓர் இடைநிலைக் கூட்டத்தை அமெரிக்காவில் நடத்த நிர்ப்பந்தித்து, விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு தராமல் விட்டு, பேச்சுவார்த்தைகளை ஓரங்கமாக்கிய அமெரிக்கா, தொடர்ந்து ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு அழுத்தம் தந்து அவர்களையும் விடுதலைப் புலிகளை பயங்கரவாத பட்டியலில் சேர்க்க வைத்து இனப்படுகொலையின் பங்காளிகளாக மஹிந்த ராஜபக்ஷவை வெற்றிவாகை சூட வைத்தது.

ஆகவே அமெரிக்கா தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வுப் பொதியைப் பெற்றுத்தர உண்மையான, நம்பகமான நண்பனாக இருக்குமா என்பதற்கு இந்த அதன் பழைய வரலாற்றையும் திரும்பிப் பார்த்து அதன் அடிப்படையில் தான் தமிழ் மக்கள் தமது முன்னெடுப்புக்களையும் நகர்த்த வேண்டும். விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாக அழிக்கிறோம் என்ற போர்வையில் அமெரிக்கா, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளையும் தவிடு பொடியாக்கியது. அவை ஏன் நடந்தன என்றும், ஏன் நடக்க விடப்பட்டன என்றும் எங்களவில் உள்ளாராய்வு வேண்டும்.


**522. அமெரிக்கா தமிழ்மக்களின் நண்பனாக வரவில்லையா?**

அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை. நிரந்தர எதிரியும் இல்லை. அமெரிக்காவினதும் இந்தியாவினதும் உறவு 1987 இல் தமிழ் மக்களின் அரசியலையும் பாதுகாப்பையும் கணக்கெடுத்தது. 2009 வரையான அவர்களது உறவு தமிழ் மக்களின் இனப்படுகொலைக்கே வழிவகுத்தது. ஆக, தமிழ் மக்கள் இவற்றை உணர்ந்து புத்திசாரியமாக, நம்ப நடந்தாலும் ஒரேயடியாக நம்பிக் கால்களை வைக்கக் கூடாது.

தங்களது அரசியல் இலாபங்களுக்காக தமிழ்மக்களையும் அழித்து, அவர்களின் அரசியல் ஆணிவேர்களையும் அறுத்து ராஜபக்ஷாக்களை வெற்றிக்குக் கொண்டு வரவேண்டும் எனப் பாடுபட்ட அமெரிக்கா, இன்று 12 வருடங்களுக்குப் பிறகு ராஜபக்ஷாக்களைத் தங்கள் வழிக்குக் கொண்டுவரும் உத்திகளில் தங்களின் நலனை முதல் வைத்தே, நண்பனாக அல்ல ஒருபங்காளியாக வருகிறது என்பதை அது வைக்கும் கருத்துக் கூறுகளில் இருந்து பார்க்கலாம். தமிழ் மக்களுக்கும் அவர்கள் இருக்கும் நிலைகளில் எதிர் காலங்களிற்கான வரைவுகள் தேவை. ஆனாலும் இவற்றின் புரிந்துணர்வு எல்லாத் தரப்பினருக்கும் இருக்க வேண்டும்.

**523. சுமந்திரன் என்னவாறான தீர்வுத் திட்டத்தை முன்வைத்திருப்பார்?**

புறப்படுமுன்னரே கட்சிக்குள்ளேயோ கூட்டமைப்புடனேயோ அன்றில் மற்ற தமிழ் பரப்புக்களுடனோ அளவளாவி ஒரு நிலைப்பாட்டுடன் போயிருந்தால் அந்தப் பரப்புகளை கோடிகாட்டியிருப்பார் எனஎண்ணுகிறேன். ஆனால் அவர்களின் கருத்துக்களைப் பார்க்கும்போது அப்படியான பேச்சுவார்த்தைகள் நீதியரசர் விக்னேஸ்வரன் அறிவித்ததைத் தவிர வேறில்லை. கூட்டமைப்பின் நிலைப்



பாடான சமஷ்டி அரசியலும் அதன் கீழ் தரப்படும் அதிகாரங்கள் பெரும்பான்மைப் பலத்தால் மீளப் பெறமுடியாததாகவும் இருக்க வேண்டும் என்பது அறிவுறுத்தப்பட்டிருக்கலாம் என்பது எனது அபிப்பிராயம்.

தமிழ் மக்கள் மீது கரிசனை காட்டிய எந்த நாடும் – இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, ஐரோப்பிய யூனியன் எவையுமே – தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை. ஆதலால் அப்படியான ஒரு தீர்வை முன்னெடுக்க மாட்டோம் என்பது பேசுப் பொருளாக இருந்திருக்கலாம்.

அவற்றுக்கு துணையாக சர்வதேச மனித உரிமைகளின் மேலெடுப்புக்கள் ஆராயப்பட்டிருக்கும்சந்தர்ப்பங்கள்உண்டு.

(வளரும்...)

# நாவலரின் இறுதி நாள்கள்

நல்லைநகர் ஆறுமுகநாவலர் அவர்கள் இலங்கையில் தமிழ் சைவம் இரண்டும் வாழப் பணிபுரிந்தவர். அன்னாரது 142ஆவது குருபூஜை தினம் நாளையாகும்.(27.11.2021 சனிக்கிழமை).



விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா

**நல்லைநகர் நாவலரின் 142ஆவது குருபூஜை நாளை**

### நாவலரின் இறுதி நிமிடங்கள்

இரண்டு நாள்களாக திருமுறைகளைப் பாடுவதோடு மட்டும் நேரத்தைச் செலவு செய்தார். செவ்வாய்க்கிழமை இரவு நோயினால் பாதிக்கப்பட்டவர் புதன்கிழமை எழுந்து நீராட முடியாதளவு போய்விட்டது.

வேதாரணியத்து சைவ சிவாச்சாரியாரை அழைத்து நாவலர் நித்திய பூஜை செய்யும் ஆத்மார்த்த சிவலிங்கமூர்த்திக்கு பூஜைகள் நடைபெற்றன. பூக்களைக் கையிலெடுத்து ஒவ்வொன்றாகப் போட்டு தன்பாட்டிற் கும்பிட்ட வண்ணமிருந்தார் நாவலர்.

தன்னைச் சூழ இருந்தவர்களைப் பார்த்து தொடர்ந்து திருமுறைகளைப் பாடுங்கள் என்று கட்டளையிட்டார். எவரும் நாவலர் இறக்கப்போகின்றார் என்று கருதவில்லை. வெள்ளிக்கிழமை சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர் முதலிய புண்ணியத் தலங்களின் விபூதியை எடுத்து அணிந்தார். தான் அணியும் உருத்திராட்ச மாலைகளையும் அணிந்து கொண்டு தன் பூஜை அறையில் இருந்த கங்கைத் தீர்த்தத்தை பருகினார். சயனிக்கும் இடத்திற் தலையிற் கைகளைக் கூப்பிய வண்ணமாகக் கண்களை மூடித் தியானஞ் செய்தார்.

கார்த்திகை மாதம் 21 ஆம் நாள் மக நட்சத்திரத்தில் இரவு 10 மணியளவில் அன்னாரது உயிர் பிரிந்தது. இவர் உயிர் பிரிவதற்கு கொஞ்ச நேரத்திற்கு முன் இவரை அவதானித்த மாணாக்கர்கள், சுற்றத்தார்கள் இவருக்குச் சமீபமாகச் சென்று இவரிடம் சில விடயங்களைக் கேட்க முற்பட்டனர்.

வித்தியாசாலை விடயமாக என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர். 'கைலாசபிள்ளையைக் கூப்பிடுங்கள்' இதுதான் அவரது கடைசி வார்த்தை. அதன்பின் அவர் பேசவேயில்லை. என்ன சொல்ல நினைத்தார் என்று இன்றுவரை தெரியவில்லை.

நாவலர் பெருமான் 56 வயது பதினொரு மாதம் 16 ஆம் நாளில் இப்பூவுலக வாழ்வை நிறைவு செய்தார். வெள்ளிக்கிழமை இரவு சிவபதமடைந்த நாவலருக்கு சனிக்கிழமை கைலாசப்பிள்ளையார் கோயிலுக்கு சமீபமாக உள்ள அவரது வீட்டில் அந்திமக் கிரியைகள் நடாத்தப்பட்டன. பெருந்திரளான மக்கள் கூடி நாவலர் பெருமானுக்கு கண்ணீர்க் காணிக்கை செலுத்தினர். வரணி, கரணவாய் ஆதீனத்தார் முன்னிலையில் வேதாரணியத்து அப்புக் குருக்கள் எனப்படும் நமச்சிவாய தேசிகரால் நிர்வாண அந்தியேட்டி செய்யப்பட்டு அவரது வீட்டிலும் வண்ணார் பண்ணை கோம்பயன் மணற் சுடலையிலும் தேசிகராற் கிரியைகள் நிறைவேற்றப்பட்டன.

நாவலரது இறுதி ஊர்வலத்திற்காக பூக்களினால் ஒரு பூந்தேர் செய்யப்பட்டு பூதவுடல் வைக்கப்பட்டு அதற்குப் பின்னால் நூற்றுக்கணக்கான அன்பர்கள் நாவலரது பிரிவுத்துயர் தாங்க முடியாது அங்கப் பிரதட்சணமாக சுமார் மூன்றரை மைல் தூரம் சென்று சுடலையை அடைந்தனர் என்பது வரலாற்றில் மறக்கமுடியாத உருக்கமான ஒரு நிகழ்வு. கோம்பயன் மயானத்தில் இராத்திரிவேளை சந்தனக்கட்டைகள் அடுக்கி ஆயிரக்கணக்கான மக்கள் கதறியழ நாவலரின் பூதவுடல் அக்கினியோடு சங்கமமாகியது.

'நானுயிரோடிருக்கும் போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள். உங்களிடத்துக் கைம்மாறு பெறுதலை சிறிதும் எண்ணாது 32 வருடகாலம் சைவசமய உண்மைகளைப் போதித்து வந்தேன்' இவை நாவலரின் கடைசிப் பிரசங்க வாசகங்கள். நாவலரைப் போல் நமக்கு யாருண்டு?

நாவலரின் வாழ்வு உண்மையானது. நாவலர் பெருமானுக்குப் பல நினைவுச்சின்னங்கள் இன்றுவரை நிறுவப்பட்டுவருகின்றன. அவர் வாழுங்காலத்தில் அவருக்குச் சிலர் செய்த இடையூறுகளை நினைந்து நாம் வெட்கமடைய வேண்டும். அவரால் எம் சந்ததி பெற்ற பேறுகள் ஏராளம். ஈழநாட்டில் சைவமும் தமிழும் இன்று நிலைபெற்று உள்ளதென்றால், அதற்கு இப் புண்ணியவானே முக்கிய காரணம் என்பதை உணரவேண்டும். அப்பெருமகனின் சரித்திரத்தை, சிறப்புக்களை சாதனைகளை அனைவரும் முழுமையாக படிக்க வேண்டும். சைவப் பாடசாலைகள், சைவ நிறுவனங்கள், அனைத்திலும் நாவலர் நினைவுச்சின்னங்கள் நிறுவப்பட்டு நாவலர்பெருமானை எம் சந்ததி மீள நினைப்பதற்கு நாம் வழி செய்யவேண்டும்.

(இவை சைவத்தமிழர்களின் கலங்கரை விளக்கம் எனும் நூலிலிருந்து.....)

### சுருக்க வரலாறு

ஆறுமுக நாவலர் (டிசெம்பர் 18, 1822 - டிசெம்பர் 5, 1879) தமிழ் உரைநடை செவ்விய முறையில் வளர் வதற்கு உறுதுணையாய் நின்றவர். தமிழ், சைவம் இரண்டும் வாழப் பணிபுரிந்தவர். யாழ்ப்பாணம்,நல்லூரில் தோன்றியவர். தமிழ் நூல்களை முதன் முறையாகச் செவ்வையான வகையில் பதிப்பித்த வர். திருக்குறள் பரிமேலழகருரை, நன்னூற் காண் டிகை போன்ற இலக்கிய, இலக்கண நூல்களையும் திருவிளையாடல் புராணம், பெரியபுராணம் போன்ற நூல்களையும் பிழையின்றிப் பதித்தவர்.

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம், நல்லூர் என்னும் ஊரில் 1822 டிசெம்பர் 18 இல் (சித்திரபானு ஆண்டு மார்கழி 5) புதன்கிழமை அவிட்ட நட்சத்திரத்தில் கந்தப்பிள்ளை - சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு இறுதி மகனாகப் பிறந்தார் நாவலரின் இயற்பெயர் ஆறுமுகம்பிள்ளை என்பதாகும். தகப்பனார் ப. கந்தப் பிள்ளை, பேரன் பரமானந்தர், பூட்டன் இலங்கைக் காவல முதலியார் ஆகிய அனைவரும் தமிழ் அறிஞர்கள். அரசாங்கத்தில் வேலை பார்த்தவர்கள். நாவலருக்கு நான்கு மூத்த சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் இருந்தனர். சகோதரர்கள் நால்வரும் அரசாங்க உத்தியோகத்தர்கள். சகோதரிகளுள் ஒருவர் வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை அவர்களின் தாயார்.

### கல்வி

ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் செய்யப்பெற்ற நாவலர், நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் நீதிநூல்களையும் தமிழையும் கற்றார். ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார். மூத்த தமையனாரால் முதலில் சரவணமுத்துப் புலவரிடமும் பின்னர் அவரது குருவாகிய சேனாதிராச முதலியாரிடமும் உயர்கல்வி கற்க அனுப்பப்பட்டார். பன்னிரண்டாவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றுப் புலமை பெற்றார்.

யாழ்ப்பாணத்தில் அக்காலத்திலிருந்த முன்னணி ஆங்கிலப் பாடசாலையான வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலையில் (இக்காலத்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) கற்று ஆங்கிலத்திலும் திறமை பெற்றார். அவரது 19ஆவது வயதில் (1841) அப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியேற்ற நாவலர், அப்பாடசாலையின் நிறுவனராயும், அதிபராயுமிருந்த பேர்சிவல் எனும் பாதிரியாருக்குக் கிறிதவ விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் வேலைக்கு உதவியாக இருந்து பணியாற்றினார். பேர் சிவல் பாதிரியாருடன் சென்னைப்பட்டணம் சென்று அச்சிடுவித்துக் கொண்டு யாழ்ப்பா ணம் திரும்பினார்.

### சமயப் பணி

சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு இசைவான கல்வி, சைவசமய வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி ஆகிய நோக்கங்களுக்காகப் பணி புரியத் தொடங்கினார் நாவலர். சைவசமயம் வளரும் பொருட்டு பிரசங்கம் செய்வதெனத் தீர்மானித்தார். இவரது முதற் பிரசங்கம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் டிசெம்பர் 31, 1847ஆம் நாள் நடைபெற்றது. பின்னர் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் பிரசங்கம் செய்தார். இப்பிரசங்கங்களின் விளைவாகப் பெரும் சமய விழிப்புணர்வு ஏற்பட்டது.

வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்தார். சமய வளர்ச்சிக்குத் தமது முழு நேரத்தையும் செலவிடத் தீர்மானித்து செப்ரெம்பர் 1848இல் தமது மத்திய கல்லூரி, 3 பவுண் மாதச் சம்பள ஆசிரியப் பணியைத் துறந்தார்.

### அச்சுப் பணி

சைவப்பிள்ளைகளுக்குப் பாடநூல்கள் அச்சிடுவதற்கு அச்சியந்திரம் வாங்குவதற்காக நல்லூர் சதா சிவம்பிள்ளையுடன் 1849 ஆடி மாதம் சென்னை சென்றார். அங்கு திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப் பிரசங்கம் செய்து தமது புலமையை வெளிப்படுத்தி நாவலர் பட்டத்தைப் பெற்றார். சென்னையில் சில காலமிருந்து சூடாமணி நிகண்டையும் சௌந்தரியலங்கரி உரையும் அச்சிற் பதித்தபின் ஓர் அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினார்.

தமது இல்லத்தில் வித்தியானுபாலனயந்திரசாலை என்னும் பெயரில் ஓர் அச்சுக்கூடம் நிறுவி பாலபாடம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரை, சிவாலயதரிசன விதி, சைவசமயசாரம், கொலை மறுத்தல், நன்னூல் விருத்தியுரை, திருச்செந்தினிரோட்டக யமகவந்தாதியுரை, திருமுருகாற்றுப்படையுரை போன்ற பல நூல்களை அச்சிட்டார். திருத்தொண்டர் பெரியபுராணத்தை வசன நடையில் எழுதி அச்சிட்டார். ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம், வச்சிரதண்டம் ஆகிய நூல்களை வெளியிட்டார்.

### தமிழகப் பணி

இவரது பணி இலங்கையில் மட்டுமன்றித் தமிழ் நாட்டிலும் பரவியிருந்தது. சென்னையில் திருவாசகம், திருக்கோவையார் நூல்களை 1859 வைகாசி மாதம் வெளியிட்டார். பெரியதொரு அச்சியந்திரத்தை விலைக்கு வாங்கிச் சென்னை தங்கசாலைத் தெருவில் வித்தியானுபாலன இயந்திரசாலை என்ற அச்சகம் நிறுவிப் பல நூல்களையும் அச்சிட்டார். சென்னையிலும் திருவாவடுதுறை மற்றும் திருநாகைக்கோராணம் ஆகிய இடங்களில் தங்கிச் சைவப்பிரசங்கங்கள் செய்தபின் 1862 பங்குனியில் யாழ்ப்பாணம் திரும்பினார்.

1863 மார்கழியில் மீண்டும் தமிழகம் சென்றார். அங்கு இராமநாதபுர சமஸ்தானத்தில் பிரசங்கம் செய்தார். அங்கிருந்து மதுரை சென்று மீனாட்சியம்மை சந்நிதானத்திலே பிரசங்கித்து மீனாட்சிக்கு அணிவிக்கப்பெற்ற பரிவட்டமும் பூமாலையும் அணிவிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டார்.

குன்றக்குடியிலுள்ள திருவண்ணாமை ஆதீனத்தில் அவர் செய்த பிரசங்கத்தை மெச்சி நாவலரைப் பல்லக்கில் ஏற்றித் தம்பிரான்கள், ஓதுவார்கள் சூழ்ந்து வரச் சகல விருதுகள், மங்கல வாத்தியங்களுடன் பட்டணப் பிரவேசம் செய்வித்தார்கள். அங்கிருந்து திருப்பெருந்துறை, திருப்பள்ளிருக்குவேளூர், சீர்காழி ஆகிய தலங்களை வணங்கிச் சிதம்பரம் சேர்ந்தார். அங்கு 1864 ஐப்பசியில் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார்.

1866 மார்கழி மாதம் சென்னை திரும்பி சைவப்பிரசங்கங்கள் செய்வதிலும் நூல்கள் அச்சிட்டு வெளியிடுவதிலும் நாவலர் ஈடுபட்டார். சிதம்பர வழக்கின் பின் நாவலர் தருமபுரி, திருவிடைமருதூர், திருவேட்டக்குடி, காரைக்கால்,கோடிக்கரை ஆகிய தலங்களைத் தரிசித்த பின்னர் 1870 பங்குனியில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.1879இல் இறைபதமடைந்தார்.



# இன்று நவம்பர் 26

# ஈழத்தின் மூத்த எழுத்தாளர் எஸ்.பொ. நினைவுதினம்

## நனவிடை தோய்தல் குறிப்புகள்

- முருகபூபதி -

இலங்கையின் மூத்த படைப்பாளி எஸ்.பொ. யாழ்ப்பாணம் நல்லூரில் 1932ஆம் ஆண்டு ஜூன் மாதம் 04ஆம் திகதி பிறந்தார். ஆஸ்திரேலியாவில் சிட்னியில் கடந்த 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி மறைந்தார்.

இன்று அவரது நினைவு தினம்.

எஸ்.பொ. குறித்த நினைவுகளை இங்கு நனவிடை தோய்தலாகப் பதிவுசெய்கின்றேன். 'நனவிடை தோய்தல்' என்ற சொற்பதத்தையும் அவர்தான் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்.

எஸ்.பொ. அவர்களை 1972 ஆம் ஆண்டு, எனது இலக்கியப்பிரவேச தொடக்க காலத்தில்தான் முதல் முதலில் கொழும்பு ஆட்டுப்பட்டித்தெருவில் ரெயின்போ அச்சகத்தில் சந்தித்தேன். அதன் பிறகு கொழும்பில் பல இலக்கியக்கூட்டங்களிலும் சந்தித்திருக்கின்றேன். எஸ்.பொ., மஹாகவி உருத்திரமூர்த்தி, இரசிகமணி கனக செந்திநாதன் , கலைஞர் ஏ.ரி. பொன்னுத்துரை உட்படப் பல இலக்கியவாதிகள் எமது நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம் தொடர்ச்சியாக மூன்று நாள்கள் நடத்திய தமிழ் விழாவிற்கு வருகை தந்த காலப்பகுதியில் எனக்கு எட்டு வயதுப் பராயம்.


அந்த வயதிலேயே அவரது நகைச்சுவையான பேச்சை கேட்டுள்ளேன். மீண்டும் அவரைச் சந்தித்து பேசும்போது எனது வயது 21. அதன்பின்னர் கொழும்பு - 07 இல் அமைந்திருந்த கல்வி வெளியீட்டுத்திணைக் களத்திலும் விவேகானந்தா வித்தியாலயத்திலும் அடிக்கடி சந்தித்து உரையாடியிருக்கின்றேன். அவர் இந்த வித்தியாலயத்தில் ஆசிரியராக பணியாற்றினார்.

எஸ்.பொ. 1980களில் நைஜீரியாவுக்கு தொழில் நிமித்தம் புறப்பட்ட வேளையில் கொழும்பு - ஜம்பட்டா வீதியில் மலையக நாடகக் கலைஞரும் 'அவள் ஒரு ஜீவநதி' திரைப்படத்தின் தயாரிப்பாளரும் வசனகர்த்தாவுமான மாத்தளை கார்த்திகேசுவின் இல்லத்தில் எஸ்.பொ வுக்காக நடந்த பிரிவுபசார நிகழ்வில் உரையாற்றினேன்.

மீண்டும் அவரை சில வருடங்களின் பின்னர் 1985 இல் ஒரு விஜயதசமி நாளில் வீரகேசரியில் நடந்த வைபவத்தின்பொழுது என்னைச் சந்திக்க வந்த எஸ்.பொ வின் ஆபிரிக்க அனுபவங்கள் பற்றிய நேர்காணலை எழுதி வெளியிட்டேன். 1987 இல் நான் ஆஸ்திரேலியாவுக்கு வந்த பின்னர் - 1989இல் எனது இரண்டாவது சிறுகதைத்தொகுதி சமாந்தரங்கள் நூலின் வெளியீட்டு விழாவை (25 ஜூன் 1989) மெல்பனில் நடத்தியபொழுது சிட்னியில் மூத்த புதல்வர் டொக்டர் அநுராவிடம் அவர் வந்திருப்பது அறிந்து, அவரைப் பிரதம பேச்சாளராக அழைத்தேன். அன்றைய நிகழ்வே அவர் ஆஸ்திரேலியாவில் முதல் முதலில் தோன்றிய இலக்கியப் பொது நிகழ்வு.



1972 முதல் 2010 வரையில் சுமார் 38 ஆண்டுகள் மாத்திரமே அவருக்கும் எனக்குமிடையிலான இலக்கிய உறவு நீடித்தது.




கலை, இலக்கிய, ஊடகத்துறையில் ஈடுபடும் எவரும் அன்றாடம் சந்திக்கக்கூடிய அனுபவங்களே அவர்தம் வாழ்வின் புத்திக்கொள்முதலாகும். எஸ்.பொ. குறித்து நானும் என்னைப்பற்றி அவரும் ஏற்கனவே நிறையவே எழுதிவிட்டோம். ஒரு கட்டத்திற்குப்பிறகு எழுதுவதற்கு எதுவும் இல்லை என்றாகிப் போனாலும், அவர் தொடர்ந்தும் பேசப்படவேண்டியவர். அவரது எழுத்தூழிய ஆளுமை தமிழ் சமூகப்பரப்பில் தவிர்க்க முடியாதது.

எழுத்தூழியம் என்ற சொற்பதமும் அவரால் அறிமுகப்படுத்தப்பட்டதுதான்.

தமிழ் இலக்கிய உலகில் எஸ்.பொ. என்ற இரண்டு எழுத்துக்களின் வாயிலாக மிகுந்த கவனத்திற்குள்ளானவரான எஸ்.பொன்னுத்துரை யாழ்ப்பாணத்தில் நல்லூரில் சண்முகம் தம்பதியரின் மகனாக 04-06-1932 ஆம் திகதி பிறந்தார். அவர் ஆஸ்திரேலியா சிட்னியில் மறையும்போது 82 வயது.

யாழ்ப்பாணத்தில் தமது ஆரம்பக்கல்வியையும் உயர்கல்வியையும் தொடர்ந்து, மேற்கல்விக்காக தமிழ்நாட்டிற்குச் சென்றார். அங்கு தாம்பரம் கிறிஸ்தவக்கல்லூரியில் பட்டப்படிப்பை நிறைவு செய்து கொண்ட எஸ்.பொ., அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பயின்றார்.

பாடசாலைப்பருவம் முதல் தீவிர வாசிப்பில் ஈடுபட்டிருந்த பொன்னுத்துரை, இளம் வயதிலேயே சிறுகதை, கட்டுரை, விமர்சனங்கள் எழுதி கலை, இலக்கியத் தேடலைத் தவமாகவே தொடர்ந்தவர். ஆங்கில இலக்கியங்களின் மீதும் ஈடுபாடு காண்பித்தார்.

தமது பதின்மூன்று வயதில் எழுத ஆரம்பித்தவர். 1940 ஆம் ஆண்டில் அவரது மூத்த சகோதரர் தம்பையா(இவரும் தமிழ்ப்புலமையுள்ளவர்) மாணவர் தேர்ச்சிக்கழகத்தின் சார்பில் ஞானோதயம் என்ற கையெழுத்துச் சஞ்சிகையை நடத்தியபொழுது, அதன் பக்கங்களை நிரப்புவதற்காகவும் இலக்கியப் படைப்புக்களை அதில் எழுதியிருக்கிறார்.

பெரும்பாலான இலக்கியவாதிகளை பாரதியும் பாரதிதாசனும் ஆரம்பகாலத்தில் பெரிதும் பாதித்திருப்பதுபோன்று பொன்னுத்துரைக்கும் இந்த இரண்டு ஆளுமைகளும் தாக்கத்தை ஏற்படுத்தியவர்கள். அவர்களின் கவியாற்றலின் பாதிப்பினால் பொன்னுத்துரை எழுதிய முதலாவது கவிதை வீரகேசரியில் வெளியானது. அதுவே அச்சில் வெளிவந்த அவரது கன்னிப்படைப்பு.


1947இன் பின்னர் த.ராஜகோபால் என்ற ஒரு பெரியவரின் தொடர்பினால் இந்திய எழுத்தாளர்களின் படைப்புக்கள் பொன்னுத்துரைக்கு படிக்கக் கிடைத் திருக்கின்றன. குறிப்பிட்ட ராஜகோபால்தான் தன்னையும் இலக்கியத்தின்பால் திசை திருப்பிவிட்டவர் என்று டொமினிக்ஜீவா குறிப்பிட்டுள்ளார்.

தமது பதினைந்து வயதிலேயே இந்தியாவின் புகழ்பூத்த படைப்பாளிகளின் தீவிர வாசகராகிவிட்டதனால் பொன்னுத்துரையும் இலக்கியப்பிரதிகளை எழுதத்தொடங்கினார்.

தம்மை இந்தத் துறையில் வளர்த்துவிட்ட த.ராஜகோபால் என்பவருக்கே தமது 'தீ' நாவலையும் சமர்ப்பணம் செய்தார்.

பொன்னுத்துரையின் முதலாவது சிறுகதை 1948 இல் தந்தை செல்வநாயம் கொழும்பிலிருந்து வெளியிட்ட 'சுதந்திரன்' பத்திரிகையில் வெளியானது. இலங்கை இதழ்களில் மட்டுமன்றி தமது 17 வயதில் தமிழக இதழ்களான காதல், பிரசண்ட விகடன், ஆனந்த போதினி முதலானவற்றிலும் எழுதியிருக்கிறார்.

இலங்கையில் பல மூத்த எழுத்தாளர்கள் ஆரம்பத்தில் - தமிழகத்தின் சென்னைப் பாதிப்பினால் தமது கதைகளின் பின்புலமாக மெரீனா பீச்சையும், மவுண்ட் ரோட்டையும் சித்திரித்துக் கொண்டிருந்தபொழுது தாமும் அவ்வாறு அந்தப்பகைப்புலத்தை உள்வாங்காமல், ஈழத்து மண்வாசனையுடன் படைப்பிலக்கியத்தில் ஈடுபட்டவர்களின் வரிசையில் இணைந்துகொண்டவர் பொன்னுத்துரை.




முழுமையான கற்பனாவாதத்தைத் தவிர்த்து யதார்த்த இலக்கிய மரபினைத் தோற்றுவித்து - சிறுகதையில் உருவம், உள்ளடக்கம், உத்திகளில் மாற்றங்களை இலங்கையில் ஏற்படுத்திய மூலவர்களில் ஒருவராக விளங்கியவர் பொன்னுத்துரை.

(12பக்கம் பார்க்க)

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்விழி நயனம்

## நாவலர் குருபூசை நாளை



நாவலர் பெருமான் சைவ நெறி தழைத்தோங்கவும், தமிழ் மொழிசெழித்து வளரவும் பெரும் பணியாற்றியவராவார்.

இலங்கையும், இந்தியாவும் அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்த போது சைவமும், தமிழும் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்கிய காலப் பகுதியிலே தோன்றியவர் தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் ஆறுமுகம்.

வரலாற்றுக்கு முற்பட்ட சமயமாகவும், ஈழம் வாழ் மக் களின் பெரும்பாலானோரது உள்ளத்துள் ஒளி விளக்காய் சுடர்விட்டிலங்குவதுமான சைவ சமயம் அந்நியரது செல்வாக்கு வலிவுற்றிருந்த காலத்தில் சிறிது நலிவுற்றிருந்தது. இலங்கைக்கு வர்த்தக நோக்கோடு வந்த அந்நிய ஆட்சியாளர் அரசியலாதிக்கத்தைக் கைப்பற்றவும் தற்சமயம் கொள்கையை பரப்பவும் எண்ணங் கொண்டு கல்வி வழிப்பிரசாரம் செய்யத் தலைப்பட்டனர். அந்நியவெற்று நாகரிகப் போக்கில் ஈடுபாடு கொண்ட மக்கள் சைவசமய கலாசார வழிகளை மறந்து வாழ்வாராயினர். இவ்வாறு சைவ சமயம் நலிவுற்றிருந்த வேளையில் நாவலர் பெருமான் தனது சொல்லாலும் எழுத்தாலும் மக்கள் அகக் கண்களைத் திறந்து அவல நிலையை அவர்களுக்கு உணர்த்தியதோடு சைவமும், தமிழும் மீண்டும் புத்துயிர் பெறுவதற்காக தம்மாலியன்ற அத்தனை பணிகளையும் செய்தார். அவரின் கல்விப் புலமையையும், நாவன்மையையும், சைவத் தமிழ் பணிகளையும் பாராட்டி திருவாடுதுறை ஆதீனம் அவருக்கு 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கியது. சைவம் காத்த நாவலர் பெருமானை சைவமக்கள் ஐந்தாம் சமயக்குரவர் எனப் போற்றுகின்றனர்.

சைவ சமயத்தை அழிய விடாது பாதுகாக்க நாவலர் பல முயற்சிகளை மேற்கொண்டார். சைவ சமயத்தவர் ஒரு சிலரிடம் காணப்பட்ட தவறான பழக்கவழக்கங்கள், செயல்கள் என்பவற்றை நீக்க முயன்றார். சைவப் பாடசாலைகளை நிறுவினார். அவர் நிறுவிய முதலாவது பாடசாலை வண்ணார்ப்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையாகும். அது 1848ஆம் ஆண்டில் நிறுவப் பெற்றது. தமிழ் நாடு சிதம்பரத்திலும் சைவப் பிரகாச வித்தியாசாலை எனும் பெயரில் பாடசாலையொன்றை நிறுவி அங்கு போதிப்பதற்கு சைவசமய நூல்களைப் பிரசுரித்தார். இதற்காக சென்னையிலும் யாழ்ப்பாணத்திலும் அச்சுக் கூடங் களை நிறுவினார். சைவ வினாவிடை, பாலபாடம், பெரிய புராணவசனம், கந்தபுராணவசனம், திருவிளையாடற்புராண வசனம் முதலான பல நூல்களை எழுதி அச்சிட்டு வெளியிட்டார்.

ஏடுகளில் எழுதப்பட்டிருந்த பல பழந்தமிழ் நூல்களைப் பரிசோ தித்து அச்சில் பதிப்பித்தவரும், அத்துறையில் ஏனை யோருக்கு வழி காட்டியாக விளங்கியவரும் நாவலர் பெருமானே ஆவார். சைவத் தமிழ்ப் பணிகளை இடையூறின்றி செய்வதற்காக தமக்குக் கிடைத்த உத்தியோகத்தையும் தியாகம் செய்தவர் நாவலர் பெருமான். தமது வாழ்நாள் முழுவதும் பிரம்சாரியாகவே வாழ்ந்தவர். சிவாலயங்களிலும், மடாலயங் களிலும் சைவ சமய உண்மைகளை எடுத்துக் கூறி பிரசங்கம் செய்தல், புராணப் படலம் செய்தல் என்பவற்றினால் சைவப் பிரசாரம் செய்தவர் நாவலர் அத்துடன் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டு சைவத்தின் உண்மையை விளக்கி சைவ மக் களிடையே புகுந்துள்ள மாசு நீக்கிப் புறச்சமயத்தவரின் தீவிர பிரசாரத்தை தடுக்க முற்பட்டவர்.

திருக்கேதீஸ்வரம், கீரிமலைச் சிவன் கோயில் என்பனவற்றின் தொன்மைச் சிறப்புக்களை மக்களுக்கு எடுத்துக் கூறி அவற்றைப் புனரமைத்து நித்திய, நைமித்திய பூஜைகளுக்கு வழிவகுக்குமாறு சைவமக்களுக்கு விஞ்ஞாபனம் விடுத்தார். இதன் காரணமாக ஆலயங்கள் மீண்டும் அமையப் பெற்றன. இறைவனின் இயல்புகளும், இறை நெறியின் அறப்பண்புகளும் கற்பிக்கப்படுகின்றன. எமது கலைத் தி ட்டத்திலே சமயக் கல்விக்கு இன்று முக்கியத்துவம் தரப்படு கின்றது. இதனை ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே உணர்ந்து எங்கள் நாவலர் பெருமான் நடைமுறைப்ப டுத்தினார். இலவசக் கல்வி, இலவச நூல்கள், தாய் மொழிக் கல்வி என்று நாடு பெருமைப்படும் கல்விச் சாதனைகளை அன்றே அவர் நிலை நாட்டினார்.

## உட்கட்டாசனம்




**செய்முறை:**

1. உடல் ஒரே நேர்கோட்டில் இருக்குமாறு (துடாசனத்தில்) நிற்கவும். (ஆரம்ப நிலை)

2. மூச்சை இழுத்தவாறு கைகளை நெஞ் சுக்கு நேராக நீட்டவும்.

3. மூச்சை வெளிவிட்டவாறு மெதுவாக முழங்கால்களை மடக்கி கதிரையில் உட்காருவது போல் உட்காரவும். பின் மூச்சை வெளிவிட்டபடி எழும்பவும். (அரை நிலை)

4. இதன் முழு நிலையாக முழுமையாக உட்காரவும். உட்காரும் போது குதிக்கால்கள் புட்டப்பகுதியைத் தொட்டவாறும் முன்புறத் தொடைகள் வயிற்றுப் புறத்தை அழுத்தியவாறும் இருக்க வேண்டும்.

5. பார்வைநேராக கைவிரல்களின் மேல் இருக்கும். இந்நிலையில் இயல்பான சுவாசம் கொள். (உச்சநிலை)

6. பின்னர் மெதுவாக மூச்சை இழுத்தவாறு எழும்பி பின் மூச்சை வெளிவிட்டவாறு மெதுவாக கைகளை கீழே விட்டு ஆரம்ப நிலைக்குவரவும்.

**பயன்கள் :**

கைகால்கள் நடுக்கம் குறையும். கால்கள் பலமடையும். தொப்பை குறையும். இடுப்பு வலி, முதுகுவலி குறையும். வாதங்கள் நீங்கும். முதுகெலும்பு பலமடையும். முழங்கால்கள், கணுக்கால்கள், தொடை கள் என்பன பலப்படும். 5 மைல்கள் நடக்கும் போது ஏற்படும் பலன் களுக்கு சமனாகும். கால் நரம்புகள், தொடைகள், எலும்புகளுக்கு நல்ல பலத்தைக் கொடுக்கும். இடுப்பு, வயிற்றுத் தசைகள் மற்றும் உள்ளுறுப்புகள் அழுத்தப்பட்டு வீரியமடைகின்றன. மலச்சிக்கல் மற்றும் அஜீரணக் கோளாறுகள், சிறு நீரகத் தொகுதி மற்றும் பெண்களது கர்ப்பப்பை, சூலகம் சம்பந்தமான பிரச்சினைகள் ஆண்களின் புரஸ்ரஸ்ரேட் சுரப்பி தொடர்பான உபாதைகள் நீங்கும்.

- ஸ்ரீ. நதிபரன் -
(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்) (தொ.இல 077-1041455)

## நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை

*தலம்: கந்தசுவாமி*
*இடம்: நல்லூர்*

தானதன தத்த தானதன தத்த
தானதன தத்த தனதான

நாதசிவன் விட்ட பாயுமன லுற்ற
நாதனென வுற்று – அருள்வோனே
நாமமது கற்று சேமமது கிட்ட
நாணமிக வுற்று – அலையாதே
வேதமறை சுட்டு பாதமலர் பற்று
வேடையைவி தித்து–அருளாயோ

வேலதனை பற்றி ஞாலமதை யெற்றி
வேகமொடு சுற்றி – வருவேலா
காதலொடு நித்தம் கோயிலது சுற்றி
காலைதொழ சித்தம் – அருள்வோனே
காலதினி லுற்று வாழுநிலை பெற்று
காலமது முற்று – கிடவேனோ
நாதமறை விட்டு நாணுதலை குட்டி
நாடுசிறை யிட்ட – கதிர்வேலா
நாதமழை கொட்ட நாளுமருள் கொட்டு
நாதனென உற்ற – பெருமானே!

- கவிஞர் குகதாசன் -

## எல்லோரும் எல்லாம் பெறட்டும்

- சிரவை ஆதீன முதல்வர்
தவத்திரு குமரகுருபர சுவாமிகள் -
(கௌமார மடாலயம், சின்னவேடம்பட்டி, கோயம்புத்தூர்)



பெரியோர்களைத் துணைகொண்டு அவர்களை நம்மவர்களாகக் கொண்டு வாழ்வதே மேலான தன்மை. அப்பெரியவர்களுள் தலையாயவன் இறைவன். அவனையே பெற்றுள்ளனர்.

பட்டம் பெற்ற அளவு மனித உள்ளம் பண்பைப் பெறவில்லை. தந்தைக்கு விருப்பம் தமது மக்கள் நன்றாகப் படிக்க வேண்டும். தன்னைப் போல் பொருளுக்காக வேலை தேடி அலைய வேண்டாம், நன்குபடித்து நல்ல வேலைக்குச் சென்று கைநிறைய பொருள்தேட வேண்டும் என்று விரும்புகின்றனர்.

இன்றைய இளைஞர்களும் தமது பெற்றோர்களின் எதிர்பார்ப்பைப் போல நன்கு படிக்கின்றனர். படித்த பின்பு நல்ல வேலையைப்பெற்று வேறு மாநிலத்திற்கோ, வேற்று நாட்டிற்கோ சென்று விடுகின்றனர். பெற்றோர் நினைத்ததைப் பிள்ளையும் செய்து விட்டான். நமது முன்னோர்கள் தமது பிள்ளைகளை படிக்க வைக்கும் பொழுது நீ படித்த பின்பு நாட்டிற்கும், வீட்டிற்கும் நல்ல பிள்ளையாக இருக்க வேண்டும் என்ற பண்பாட்டை போதித்தார்கள். அவர்களும் அப்படியே வாழ்ந்தார்கள். நமக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்த விடுதலை வீரர்கள் தாய்மண்ணே வணக்கம் என்று வணங்கி பிறரையும் தாய்மண்ணை வணங்கச் செய்தனர். இன்று நமது இந்தத் தாய்மண்ணில் பாரதத் தாயின் படித்த இளைஞர் சிலர் தாய்மண்ணிற்கு வணக்கம் சொல்லி வேறு மண்ணிற்குச் சென்று விடுகின்றனர். இது இன்றைய நடைமுறை உண்மை.

இன்றைய எந்திரத்தன்மையுடைய வாழ்வில் மனிதனுக்கு மன ஓய்வும் மன அமைதியும் இல்லை. குடும்பத்தோடு செலவிடும் நேரமும் குறைவு. ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வி அவசியம் அக் கல்வி வெறும் பொருளைத் தேடுகின்ற கல்வியாக இல்லாமல் அன்பையும், அறத்தையும் போதிக்கின்ற கல்வியாக இருத்தல் நலம். நமது முன்னோர்கள் வாழ்ந்த அமைதியான வாழ்க்கையே மனித வாழ்வின் பண்பட்ட நிலையாகும். அப்படிப் பட்ட அமைதியான வாழ்வு ஒவ்வொரு தனிமனிதனுக்கும் மீண்டும் அமைந்தால் இல்லறம் நல்லறமாக அமையும். ஒன்றுபடுவோம் ஒற்றுமையாய் வாழ்வோம், இல்லறம் நல்லறமாக அமைய அனைவரும் கூடிவாழும் வாழ்க்கை வாழக் கற்றுக் கொள்வோமாக.



● முன்சி பஸ்றி



# கிண்ணியாவின் நீரோடு கரைந்த கனவுகள்





பாடசாலை செல்லும் பிள்ளையைப் பார்த்து நன்றாகப் படித்து வா எனக் கூறிய காலம் போய், உயிருடன் பத்திரமாக திரும்பி வா எனக் கூறும் காலமாகிவிட்டது. காரணம், திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கிண்ணியா – குறிஞ்சாக்கேணியில் நடந்த அந்தக் கொடூரச் சம்பவம்.

நவம்பர் 23ஆம் திகதியன்று மலர்ந்த நாள் சிறப்பாக அமைய வேண்டும் என்னும் எண்ணத்துடன் அனைவரும் அவர்களது வேலைக்குத் தயாராகின்றோம். அவ்வாறே கிண்ணியாவில் 26 பேர் குறிஞ்சாக்கேணி பாலத்தின் பக்கம் வந்தனர். அங்கு புதிய பாலம் கட்டும் பணி முன்னெடுக்கப்பட்டு நடந்து கொண்டிருந்தது. அதனால் அவ்வழியே இழுவைப்படகு மூலமே அங்கு போக்குவரத்து இடம்பெற்றுள்ளது. வேலைக்குச் செல்ல வேண்டும், பாடசாலைக்குச் செல்ல வேண்டும், பிள்ளைகளை, பேரக்குழந்தைகளைப் பாடசாலைக்கு கூட்டிச் செல்லவேண்டும் எனப் பலதரப்பட்ட எண்ணங்களுடன் அவர்கள் அந்த இழுவைப் படகில் ஏறிப் பயணித்துக் கொண்டிருந்தனர்.



கரையைத் தொட இன்னும் சிறு தூரம் இருக்கும் வேளையில் திடீரென எதிர்பாராத விதமாக படகு கவிழ்ந்தது. பயணித்த அனைவரும் நீரில் அவதியுற்றனர். அப்போது அந்த இடத்தில் நின்ற பலரும் நீரில் குதித்து அவர்களைக் காப்பாற்ற முயன்றனர். மொத்தமாக 26 பயணிகள் அந்தப் படகில் 20 பேர் காப்பாற்றப்பட்டனர். 6 பேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர். அதில் 4 பாடசாலை மாணவர்களாவர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், இரண்டு பிள்ளைகள், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரிகள் மற்றும் 70 வயதான முதியவர் ஒருவர் என 6 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்று சில மணி நேரங்களில் கிண்ணியாவின் புகாரி சந்தியில் டயர்களை எரித்து மக்கள் ஆர்ப்பாட்டம் மூலம் தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தினர். மக்கள் மனதில் எழுந்த ஆத்திரத்திலும் அர்த்தம் உள்ளது. இழந்தது உயிர்களை அல்லவா…

யாவும் நடைபெற்ற பின்னர் அதிகாரிகள் மக்கள் மீது குற்றஞ்சாட்டுகின்றனர். இவ்வழியே போக்குவரத்தைத் தடுத்து வைத்திருந்த போதிலும் அவர்கள் இழுவைப் படகு மூலம் பயணித்தது பிழை எனக் கூறுகின்றார்கள்.



**தயவுசெய்து இந்தச் சம்பவத்தை அரசியலாக்க வேண்டாம். இந்தச் சம்பவம் அரசியல் அல்ல; நம் எதிர்காலத் தலைவர்களில் சிலரை இழந்த பெரும் துயரம்.**



போக்குவரத்து இன்றி இருப்பின் பாடசாலை செல்லும் பிள்ளைகள் எவ்வாறு செல்வார்கள்? வேலைக்குச் செல்ல வேண்டியவர்கள் எவ்வாறு செல்வார்கள்? அதிகாரிகள் இதற்கான மாற்று வழியாக தற்காலிக ஒரு பாதையை அமைத்துக் கொடுக்காத போது மக்கள் தமது கடமைகளை முடிக்க ஒரு வழி செய்யத்தான் வேண்டும்.

தாம் தப்பிக்க மக்கள் மீது இப்படிக் குற்றஞ்சாட்டும் இந்த அதிகாரிகள் பதவியில் இருந்து என்ன பயன்? இந்தப் பாரிய இழப்பை ஜீரணிக்க முடியாத மக்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் தௌபீக்கின் கவனயீனம்தான் இதற்குக் காரணம் எனக் கருதி அவரது வீட்டின் மீது தாக்குதல் நடத்தினர்.

நாடாளுமன்றக் கூட்டத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்பால் குறிஞ்சாக்கேணி பாலத்தைக் கட்டும் வேலைகளை ஆரம்பிக்க முன்னர் அதற்கான தற்காலிகப் பாதை ஒன்று அமைக்கும்படி கேட்கப்பட்டபோது அது இராஜாங்க அமைச்சரால் கேலி செய்யப்பட்டது. தற்காலிகப் பாதை அமைக்காதமையே இன்று இத்தகைய பெரும் விபரீதம் ஆகிவிட்டது.

இந்தச் சம்பவத்துக்கு அரசியல்வாதிகளும் காரணம் எனில் அது துரோகச் செயலாகின்றது. மக்களின் வாக்குகளில் இருக்கும் முக்கியத்துவம் உயிர்களிலும் இருக்க வேண்டும் அல்லவா…

எதிர்பாராது கடந்த ஒரு நொடி அந்நாளை கிண்ணியாவின் கறுப்புத் தினமாக்கியது. பல தரப்பட்ட எதிர்காலக் கனவுகளுடன் பள்ளிச் சீருடை அணிந்த சிறுவர்கள் பிணமாக வீடு திரும்பியபோது அவர்களது பெற்றோர்களும் உறவினர்களும் அந்த நிமிடத்தை எவ்வாறு தாங்கி இருக்க முடியும். இதற்கான நட்டஈடு எதுவாக இருப்பினும் அவர்கள் இழந்த உயிருக்கு ஈடாகாது.

இந்தச் சம்பவத்தைக் கொண்டே நாட்டில் பல அரசியல்கள் இடம்பெற வாய்ப்புண்டு. தயவுசெய்து இந்தச் சம்பவத்தை அரசியலாக்க வேண்டாம். இந்தச் சம்பவம் அரசியல் அல்ல; நம் எதிர்காலத் தலைவர்களில் சிலரை இழந்த பெரும் துயரம்.

# தலையில் மகுடம் அணிந்தால் மட்டும் போதாது மக்களின் துன்பத்தைத் தீர்க்கவும் வேண்டும்

## பேராயர் கர்தினால் கோரிக்கை



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளையேனும் நடைமுறைப்படுத்துமாறு உரிய தரப்பினரிடம் பல சந்தர்ப்பங்களிலும் கோரிக்கை விடுத்த போதிலும், அதற்கான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் அவர்களும் இந்தத் தாக்குதல்களுடன் தொடர்புபட்டுள்ளனரா என்ற சந்தேகம் எழுவதாக பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

நாட்டில் தற்போது பாரதூரமானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளது. தலையில் மகுடத்தைப் போன்ற ஒன்றை அணிந்திருப்பது நாடகங்களில் நடிப்பதற்காகவோ அல்லது வேடிக்கைக்காகவோ அல்ல.

நாம் அதனை அணிவதாயின் மக்களின் சுமைகளைத் தாங்க வேண்டும். அவர்களின் துன்பங்களை நீக்க வேண்டும். அவ்வாறில்லை எனில் பொறுப்பை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் பேராயர் தெரிவித்தார்.

புனரமைக்கப்பட்ட புனித வாதுவ தேவாலயத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பேராயர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் மூலம் நாட்டில் பாரிய அழிவை ஏற்படுத்துவதில் சில குழுக்கள் ஈடுபட்டன எனத் தெரிகிறது. இது தொடர்பில் ஆணைக்குழு அறிக்கையின் ஊடாக சில விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலோட்டமாக வெளிப்படும் விடயங்களை விட, இதில் பல விடயங்கள் காணப்படுகின்றமையை நாம் உணர்ந்து கொண்டிருக்கின்றோம். அதற்குப் பல காரணங்கள் உள்ளன.

எமக்கு யாரையும் பழிவாங்க வேண்டிய தேவை கிடையாது. யார் மீதும் கோபம் கிடையாது. எனினும் எமக்கு உண்மை தெரிந்தாக வேண்டும்.

269 பேர் உயிரிழந்துள்ளனர். உயிர்த்த ஞாயிறு ஆராதனைகளில் பங்குபற்றி வீட்டுக்குச் செல்ல தேவாலயத்துக்கு வருகை தந்தவர்களுக்கே இந்த சோகம் இடம் பெற்றது. சிலர் தமது குடும்பத்தை இழந்துள்ளனர். மேலும் பலர் வாழ் நாள் முழுவதும் குணப்படுத்த முடியாதளவிற்கு அங்கவீனமடைந்துள்ளனர்.

இவர்களின் மனங்களில் உள்ள வேதனையை வார்த்தைகளால் கூற முடியாது. அதனை இலகுவாகக் கடந்து செல்லவும் முடியாது.

இந்த வேதனையைப் போக்குவதற்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மேற்கொண்டவர்கள் யார்? அதற்கான காரணம் என்ன? என்பவற்றின் உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். அதனைக் கண்டறியும் வரை நாம் எமது போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை. இந்தப் பணியை முடிக்கும் வரை அனைவரையும் ஒன்றாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இல்லையெனில் நமது தியாகம் பயனற்றதாகும்.

நாம் நம் உயிரைப் பணயம் வைத்து மக்களை நேசிக்க வேண்டும். அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதிலிருந்து நாம் தப்ப முடியாது. எனவே, இந்த முயற்சியில் ஒன்றுபட்ட ஆதரவிற்காக அருட் தந்தையர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டில் தற்போது பாரதூரமானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளது. தலையில் மகுடத்தைப் போன்ற ஒன்றை அணிந்திருப்பது நாடகங்களில் நடிப்பதற்காகவோ அல்லது வேடிக்கைக்காகவோ அல்ல. நாம் அதனை அணிவதாயின் மக்களின் சுமைகளை தாங்க வேண்டும். அவர்களின் துன்பங்களை நீக்க வேண்டும்.

இருநூறுக்கும் மேற்பட்ட கத்தோலிக்கர்கள் படுகொலை செய்யப்பட்டதைப் போல, தாக்குதலை அறிந்தவர்கள் மற்றும் உயர் பதவியில் வாக்குறுதிகளை வழங்கியவர்கள் இப்போது எதுவும் தெரியாதவர்களைப் போன்றிருக்கின்றமையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாமலுள்ளது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளையேனும் நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. நாம் எவ்வளவு கூறினாலும் அவர்கள் அதைச் செய்யவில்லை.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் அவர்களுடன் இந்தத் தாக்குதல்களுடன் தொடர்புபட்டுள்ளார்களா என்ற சந்தேகம் எழுகிறது.

அவர்களால் எதனையும் செய்ய முடியவில்லையெனில் செய்யக் கூடியவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். நாம் அரசியல் செய்யவில்லை. எமது தேவை உண்மையையும் யதார்த்தத்தையும் தெரிந்து கொள்வதாகும்.

எனவே, அனைத்து கத்தோலிக்கர்களும் இந்தப் பிரச்சினையில் ஒன்றுபட்டு நின்று, இந்தத் தாக்குதலுக்கு யார் காரணம் என்ற உண்மையைக் கண்டறிய அதிகாரிகளுக்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.

# திருமலையில் போதையில் அட்டகாசம் செய்தவர் பொலிஸாரால் கைதானார்

திருகோணமலை, நவ. 26

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி வீதி லிங்கநகர் பிரதேசத்தில் பிரதான வீதியில் குடிபோதையில் அட்டகாசம் செய்த நபர் ஒருவரைக் கைது செய்துள்ளோம் என திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது-

குடிபோதையில் திருகோணமலை கண்டி வீதி பிரதான வீதியில் பயணித்த வாகனங்களுக்கு கற்க ளால் எறிந்து சேதப்படுத்தியதுடன், வீதியால் பயணித்த பயணிகளுக்கும் இடையூறு விளைவித்து வீதியால் பயணித்த பெண்கள் மீது முறையற்ற விதத்தில் நடந்து கொண்டமையால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் குறித்த நபரை தாக்கி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு குடிபோதையில் அட்டகாசம் செய்த நபர் கந்தளாய் முள்ளிப்பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், சிகிச்சை ஒன்றுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு வருகை தந்தார் எனவும், நகரில் பல வர்த்தக நிலையங்களில் இவர் அட்டகாசம் செய்துள்ளார் எனவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு குடிபோதையில் அத்துமீறி நடந்துகொண்ட நபரால் அதிசொகுசு மோட்டார் கார் ஒன்று சேதமடைந்துள்ளதாகவும், பாதிக்கப்பட்டவர்களால் திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குறித்த நபரை கைது செய்து சட்ட வைத்திய பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர் எனவும் மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தொலைபேசி அழைப்புக்களுக்கு வடக்கு ஆளுநர் பதிலளிப்பதில்லை

## மஹிந்தவிடம் சிறிதரன் முறையீடு



வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுடன் எம்.பிக்களான எம்மால் கூட தொலைபேசியில் தொடர்புகொள்ள முடியவில்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட எம்.பி. சி.சிறிதரன் முறையிட்டார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு முறையிட்ட அவர் மேலும் கூறுகையில் –

கிளிநொச்சி மாவட்டத்தின் சில பிரச்சினைகளைப் பேசுவதற்காக வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநரான ஜீவன் தியாகராஜாவுக்குப் பல தடவைகள் தொலைபேசியில் தொடர்புகொள்ள முயற்சித்தேன்.

ஆனால், அவர் எனது அழைப்புக்களுக்குப் பதிலளிக்கவில்லை. வடக்கு மாகாணத்தின் ஆளுநர்களாக இருந்த திருமதி சார்ள்ஸ் மற்றும் சுரேன் ராகவன் ஆகியோர் நாம் எந்தவேளையில் தொலைபேசி அழைப்பு எடுத்தாலும் உடனடியாகப் பதில் வழங்குவார்கள்.

ஆனால், ஜீவன் தியாகராஜா எமது தொலைபேசி அழைப்புக்களுக்குப் பதிலளிப்பதில்லை என்பதை இங்குள்ள பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். – எனத் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபருடன் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதிகள் சந்திப்பு



ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டத்துக்கான இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அப்துர் ராகிம் சிட்டுஹி மற்றும் அவரின் அதிகாரிகளும் யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனை சந்தித்துள்ளனர்.

யாழ். மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்து, மரியாதை நிமித்தமான சந்திப்பை மேற்கொண்டனர்.

இந்த சந்திப்பில் உலக உணவுத் திட்டத்தால் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகள் பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக உணவுப் பாதுகாப்பு, போசாக்கு குறைபாடு, பாடசாலை மாணவர்களின் மதிய உணவுத் திட்டம் மற்றும் ஜீவனோபாயத் திட்டங்கள் என்பவை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டமையுடன், எதிர்காலத்திட்டங்கள்பற்றியும்கருத்து தெரிவிக்கப்பட்டது.

# சேற்றைக் கிளறினால் துர்நாற்றம் வெளியில்வரும் அரசில் உள்ளவர்களை எச்சரித்தார் தயாசிறி

சேற்றைக் கிளறினால் துர்நாற்றமே வெளியில் வரும் என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

மஹிந்தானந்தவால் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

கடந்த அரசாங்கம் இறுதி வருடத்தில் 370 கோடி பில்லியன் ரூபா செலவிட்டிருப்ப தாகவும், ஆனால் 2020 ஆம் ஆண்டில் தற்போதைய ஜனாதிபதி 170 கோடி ரூபா மாத்திரமே செலவினங்களுக்காக பயன்படுத்தியுள்ளார் என மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார்.

2018 ஆம் ஆண்டு கிராம சக்தி வேலைத்திட்டத்துக்கு மாத்திரம் 200 கோடி மில்லியன் ரூபா நிதி செலவு செய்திருந்தோம். அதன் பின்னர் உணவு உற்பத்திக்கு 50 கோடி ரூபா செலவு செய்திருந்தோம். 2019ஆம் ஆண்டு கிராம சக்தி வேலைத்திட்டத்துக்காக 400 கோடி மில்லியன் ரூபா செலவு செய்திருந்தோம்.

அதன்படி பார்க்கும்போது பல்வேறு வேலைத்திட்டங்களுக்கு பாரியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. கிராம சக்தி வேலைத்திட்டம் நாடுபூராகவுமுள்ள சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் முன்னெடுக்கப்பட்டது.

ஆனால், இன்று அந்த வேலைத் திட்டங்கள் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன. அவ்வாறாயின் அந்த வேலைத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக நீக்கப்படும்.



சிறுநீரக நோயாளர்களுக்காக கடன் வாங்காமல் நன்கொடை பெற்று பொலன்னறுவையில் வைத்தியசாலையொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் அந்த வைத்தியசாலை திறக்கப்படவில்லை.

இதுவே இன்றைய நிலைமை. சுற்றாடல் பாதுகாப்புக்காகவும் பல்வேறு வேலைத் திட்டங்கள், போதைப்பொருள் ஒழிப்பு வேலைத் திட்டம், 5 ஆணைக் குழுக்கள் போன்றனவும் செயற்பட்டன. இவற்றுக்காகவும் நிதி செலவிடப்பட்டிருந்தது.

2015ஆம் ஆண்டுக்கு பின்னர் அதற்கு முன்னர் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நடவடிக்கைகள் இடம்பெற்றன. பண்டார நாயக்கவுக்கு பின்னர் அரசாங்கத் தரப்பில் தவறு செய்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை அரசாங்கத்திலிருந்து வெளியேற்றுவதற்கு கடந்த ஜனாதிபதி ஒருவரே நடவடிக்கை எடுத்திருந்தார் என்பதை மறந்துவிடவேண்டாம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துக்கும் தனியான விசாரணைகள் இடம்பெற்றிருந்தன. ஆகவே, 370 கோடி ரூபா நிதியை அநாவசியமாக செலவு செய்ததாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை முழுமையாக மறுக்கிறோம்.

எங்களுக்குயாரும் ஒத்துழைப்பு வழங்கவில்லை. ஆனால், நாங்கள் மஹிந்தராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தோம். ஆனால், அதிகாரத்தைபெற்றுக் கொண்டு முழு அதிகாரத்தையும் நாடாளுமன்றத்துக்கே வழங்கினார்கள்.

மக்களின் நம்பிக்கைக்காகவே 2018 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவை நாட்டின் பிரதமராக்கினார் என்பதை மறந்து விட வேண்டாம். அதனால், இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும்போது அவதானமாக இருக்க வேண்டும்.

கடந்த ஆட்சியின் போது ஜனாதிபதி 200 வாகனங்களை பயன்படுத்தினார் என மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்திருந்தார். ரோஹித அபயகுணவர்தன அவரின் உரையில் கடந்த ஆட்சியின் போது ஜனாதிபதி 386 வாகனங்களை பயன்படுத்தினார் எனத் தெரிவிக்கின்றார். இந்த கருத்தில் எது உண்மை.

தற்போதைய ஜனாதிபதி 3 வாகனங்களையே பயன்படுத்துகின்றார். அது சிறந்த விடயம். ஆனால், வாகனங்களை பயன்படுத்துவதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு வரையறைகள் இருக்கின்றன. இது யாவரும் அறிந்ததே. எதுவும் தெரியாத குழந்தைகளைப் போன்று பொய்கூறக் கூடாது.

இவ்வாறான கருத்துக்களை முன்வைக்கும்போது பொறுப்புடன் சிந்தித்து உரையாற்ற வேண்டும். இந்த விடயங்கள் தொடர்பில் பேசினால் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் உரையாற்ற முடியும்.

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இவ்வாறான விடயத்தை தெரிவித்தமை இது முதல் தடவையல்ல. ஓரிரு தடவைகளில் இதனை நிறுத்தினால் பிரச்சினையில்லை. நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஒருவருக்கு சேறு பூசும் போது எங்களால் பொறுமையாக இருக்க முடியாது.

நாட்டில் மஹிந்தானந்த அளுத்கமகே மயிலைபோன்று ஆடிக்கொண்டிருக்கின்றார். மஹிந்தானந்த சேற்றை கிளறிக்கொண்டிருக்கிறார்.

தொடர்ந்து கிளறினால் துர்நாற்றமே வெளியில் வரும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தாக்க வேண்டுமென்றால் நேரடியாக மோதுங்கள். எங்கள் கட்சி தலைமையின் மீது பொய் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம்.

அவ்வாறு செயற்பட்டால் பெரும் நெருக்கடியை சந்திக்க நேரிடும். இவ்வாறான கருத்துகள் தொடர்பில் சபாநாயகரும் கவனம் செலுத்த வேண்டும். எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஈழத்தின் மூத்த எழுத்தாளர்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையின் இலக்கிய மறுமலர்ச்சிக் காலத்திலிருந்து பொன்னுத்துரையின் ஆக்க இலக்கியங்களை இனம் காண முடியும். அவரது முதலாவது நாவல் 'தீ' தமிழகத்தில் சரஸ்வதி இதழை நடத்திய விஜயபாஸ்கரனின் முயற்சியால் வெளியானது. இந்நாவல் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் திருப்புமுனையைத் தோற்றுவித்ததுடன் சர்ச்சைகளையும் உருவாக்கியது.

'தீயைத் தீயிட்டுக்கொளுத்துங்கள்!' முதலான குரல்களும் எழுந்தன. இவ்வாறு அவரது முதல் நாவல் தீவிர வாசிப்புக்கும் கவனிப்புக்கும் சர்ச்சைக்கும் இலக்கானது முதல் பொன்னுத்துரையும் இலக்கிய உலகில் சர்ச்சைக்குரிய மனிதராகவே தென்படலானார்.

ஓர் இலக்கியக் கலகக்காரன் என்றும், பரீட்சார்த்த முயற்சிகளில் ஈடுபடும் இலக்கியவாதி என்றும் அழைக்கப்படலானார்.

அவரது கருத்துக்களுக்கு நிகழ்ந்த எதிர்வினைகளினால் அவர் தன்னைத் தொடர்ந்தும் பல நிலைகளிலும் எதிர் வினைகளை எதிர்நோக்கும் எழுத்தாளராகவே இனம்காட்டி வரலானார். தொடக்கத்தில் அவரும் அவரது நண்பர்களும் யாழ்ப்பாணத்தில் பின்வரும் புனைபெயர்களில் தம்மை அழைத்துக்கொண்டனர். இந்த நண்பர்கள் கம்யூனிஸக் கொள்கை கோட்பாடுகளினால் ஆகர்ஷிக்கப்பட்டிருந்தவர்கள். டானியல் (புரட்சி தாசன்), டொமினிக் ஜீவா (புரட்சி மோகன்) பொன்னுத்துரைபுரட்சிப்பித்தன்).

பொன்னுத்துரை இவ்வாறு முற்போக்கு கூடாரத்தில் தமது பெயரைப் புரட்சியுடன் இணைத்துக் கொண்டாலும் கூட ஒரு கட்டத்தில் தனது புனைபெயரை 'பழமை தாசன்' என்றும் மாற்றிக் கொண்டவர்.

அவர் அடிக்கடி புனைபெயர்களில் எழுதுவதை வழக்கமாகக்கொண்டிருந்தாலும் இலக்கிய உலகில் நிலைத்த பெயர் 'எஸ்.பொ.' என்ற இரண்டு எழுத்துக்கள்தான்.

1956 இல் ஆசிரியத் தொழில்சார்ந்து அவரது வாழ்வு கிழக்கு மாகாணம் நோக்கித் திசை திரும்பியது. கருத்து ரீதியாக முற்போக்கு எழுத்தாளர்களுடன் முரண்பட்டு, 1960 களில் கொழும்பு சமாகிராக் கல்லூரியில் நடந்த மாநாட்டிலிருந்து வெளிநடப்புச்செய்தார்.

அப்பொழுது அவருடன் இணைந்து வெளியேறியவர்கள் இளம்பிறை ரஹ்மான், வ.அ.இராசரத்தினம் உட்பட வேறும் சிலர். இவர்களில் இராசரத்தினம் மூதூரைச் சேர்ந்த ஆசிரியர். மறைந்து விட்டார். மற்றவர் கொழும்பில் ஆட்டுப் பட்டித் தெருவில் நீண்டகாலம் ரெயின்போ என்ற அச்சகத்தை நடத்தி அரசு வெளியீடு என்ற பதிப்பகத்தின் மூலம் பல நூல்களையும் இளம்பிறை என்ற மாசிகையையும் வெளியிட்ட ரஹ்மான். இவர் தற்பொழுது சென்னையில் கோடம் பாக்கத்தில் வசிக்கின்றார்.

பொன்னுத்துரையின் இலக்கியச் செயற்பாடுகளுக்கு தொடர்ந்தும் உறுதுணையாக விளங்கியவர் ரஹ்மான். பொன்னுத்துரையின் இலக்கிய வாழ்வில் இரண்டறக் கலந்த இவரின் தொடர்ச்சியான நட்பினால்தான் பிற்காலத்தில் சென்னையில் மித்ர பதிப்பகம் உருவானது. எனவே ரஹ்மான் பொன்னுத்துரையின் வாழ்வில் மிகவும் முக்கியமான இலக்கிய சகா. எஸ்.பொ. சென்னையில் மித்ர பதிப்பகத்தை உருவாக்குவதற்கு பக்கபலமாக இருந்தவர் அவரது மூத்த புதல்வன் டொக்டர் அநுரா.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலிருந்து வெளியேறிய பொன்னுத்துரை, அடுத்த கட்டமாக அதற்கு எதிராக நற்போக்கு இலக்கிய முகாமைத் தோற்றுவிக்க முனைந்தார்.

முற்போக்குக்கு எதிராக பிற்போக்கு என்று எதனையும் தொடங்க முடியாது. அதனால் நற்போக்கு என்பது முற்போக்கு (சுய) கம்யூனிஸ்ட் கட்சி. பிற்போக்கு முகாம் அமைக்க முடியாது. அதனால் நற்போக்கு எனச்சூட்டிக்கொண்டோம் என்று தமது வாக்கு மூலத்தைப் பதிவுசெய்து கொண்ட பொன்னுத்துரை காலம் கடந்து மேலும் விரிவாக தேடல் என்ற நேர்காணல் (டென்மார்க் தர்மகுலசிங்கம் எழுதியது) நூலிலும் நற்போக்கு என்ற நூலிலும் முற்போக்கு இலக்கிய முகாமிலிருந்து தான் வெளியேறியமைக்கான நியாயங்களை விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

பொன்னுத்துரையிடமிருந்த ஆழமான தமிழ் இலக்கிய ஆற்றலும் கல்வியினால் அவர் பெற்றுக் கொண்ட ஆங்கில அறிவுமே பிற்காலத்தில் புகழ்பெற்ற சில பிறமொழி இலக்கியப் படைப்புகளை ஆங்கிலமொழி மூலம் படித்துத் தமிழுக்கு மொழிபெயர்க்கச் செய்திருக்கிறது.

தமிழ்நாட்டிலிருந்து தமது பட்டப்படிப்பை நிறைவு செய்துகொண்டு திரும்பியவேளையில் வடமாகாணதமிழ் சமூக அமைப்பு குறித்த பிரக்ஞை அவரைத் தீவிரமாகச் சிந்திக்க வைத்திருக்கிறது. அவ்வேளையில் அவருடைய தோழர்களாக விளங்கிய பலர் முற்போக்கான சிந்தனை உடையவர்களாகவும் மார்க்ஸீய கோட்பாடுகளை வரித்துக் கொண்டவர்களாகவும் விளங்கினர்.

பொன்னுத்துரையின் மூத்த சகோதரி திருமணம் முடித்த எம்.ஸி.சுப்பிரமணியம் அவர்கள் வடமாகாண சிறுபான்மை வெகுஜன அமைப்பின் ஸ்தாபகராகவும் சமூகப்பணியாளராகவும் விளங்கியவர். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் (மாஸ்கோ) உறுப்பினர். பின்னாளில் இலங்கை நாடாளுமன்றத்தில் நியமன எம்.பி. ஆகவும் பதவியேற்றவர்.

பொன்னுத்துரையின் குடும்ப உறவுக்குள்ளும் அவரது தோழர்கள் வட்டத்திலும் சாதி ஒழிப்புக் குறித்த எண்ணங்களேபரவலாகியிருந்தமையினால் பொன்னுத்துரையும் அவர்களினால் உள்வாங்கப்பட்டார். அவர்கள் மட்டத்தில் பட்டம் பெற்ற புலமையாளர் என்ற மேலதிக தகைமையும் இவருக்குக் கிடைத்தது.

இலங்கையின் மூத்த எழுத்தாளர்கள் கே.டானியல், டொமினிக்ஜீவா, செ. கணேசலிங்கன் முதலானோருடன் தினமும் இலக்கியம் தொடர்பான உரையாடல்களை தொடர்ந்தார். கணேசலிங்கன் யாழ். பரமேஸ்வராக் கல்லூரி மாணவராக அவ்வேளையில் பயின்றுகொண்டிருந்தார்.

டானியலும் டொமினிக் ஜீவாவும் தத்தமது குடும்பச் சூழல்களினால் படிப்பைத் தொடர முடியாமல் தொழில்களில் ஈடுபட்டனர்.

எனினும் இவர்கள் நால்வரும் அடிக்கடி சந்தித்து தமக்குள் ஓர் இலக்கிய வட்டத்தையும் ஏற்படுத்திக் கொண்டனர். பொன்னுத்துரை ஆசிரியப்பணியில் ஈடுபட்டார்.

பொன்னுத்துரை சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, வாழ்க்கை வரலாறு, விமர்சனம், ஆய்வு, மொழிபெயர்ப்பு, சுயசரிதை முதலான பல்துறைகளில் தடம் பதித்து பல நூல்களைப் படைக்க முடிந்திருக்கிறது என்றும் கருத இடமுண்டு. அத்துடன் சில நூல்களின் தொகுப்பாசிரியராகவும் தமது பணி தொடர்ந்திருப்பவர்.

பின்வரும் அவரது நூல்களே அதற்கு ஆதாரம்:

வீ ஆண்மை; எஸ்.பொ. கதைகள்; அவா (சிறுகதைத் தொகுதிகள்); தீ; சடங்கு; மாயினி (நாவல்கள்); அப்பையா; கீதை நிழலில்; அப்பாவும் மகனும்; வலை; முள்; பூ; தேடல்; முறுவல்; இஸ்லாமும் தமிழும்; பெருங்காப்பியம் பத்து (தொகுப்பாசிரியர்); மத்தாப்பு + சதுரங்கம்; ?(கேள்விக்குறியிலும் ஒரு நூல்); நனவிடை தோய்தல்; நீலாவணன் நினைவுகள்; இனி ஒரு விதி செய்வோம்; வரலாற்றில் வாழ்தல் (சுயசரிதை இரண்டு பாகங்கள்); ஈடு(நாடகம்)( சிட்னி அ.சந்திரஹாசனுடன் இணைந்து எழுதியது); மணி மகுடம்; தீதும் நன்றும்; காந்தீயக் கதைகள்; காந்தி தரிசனம்; மகாவம் (மொழிபெயர்ப்பு).

இவை தவிர, பல ஆபிரிக்க இலக்கியப் படைப்புகளையும் மொழி பெயர்த்து தமிழுக்கு வரவாக்கியவர்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஒற்றுமையில்லையேல் கிழக்கு பறிபோய்விடும்

## கனடாவில் முஸ்லிம்கள் மத்தியில் சாணக்கியன் எம்.பி. எச்சரிக்கை



கிழக்கு மாகாணத்தில் தமிழர்களும் இஸ்லாமியர்களும் ஒற்றுமையாகச் செயற்படாவிடின், எதிர்காலத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம் மாகாணத்தில் அதிகரித்து விடும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

கனடா வாழ் இலங்கை முஸ்லிம் சமூகத்தினரை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உண்மையிலேயே என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், அனைத்து சமூகங்களுக்காகவும் குரல் கொடுக்கும் ஒருவனாகவே என்னைப் பார்க்கின்றேன்.

சில இஸ்லாமிய அரசியல்வாதிகள் மத்தியில் கருத்து ஒன்று உள்ளது. இவர் என்ன எங்களுடைய பிரச்சினைகளைக் கதைக்கின்றார், எங்களுக்காகப் பேசுகின்றார் என்று அவர்கள் நினைக்கின்றனர். எனினும், நான் அனைத்துப் பிரச்சினைகளுக்காகவும் குரல் கொடுக்கின்றேன்.

அதிலே இஸ்லாமிய சகோதரர்கள் மத்தியிலேயே அதிக வரவேற்பு கிடைத்துள்ளது. தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கும்போது எங்களைப் பாராட்டுவதை விடவும், இஸ்லாமியர்களுடைய பாராட்டுக்கள் அதிகமாக வருகின் றன.

எனக்கு முன்னர் உரையாற்றிய ஒருவர் சொன்னார், நாங்கள் அவர்களுக்கு வாக்களிக்கப்போவதில்லை என்று. அது உண்மைதான். என்னைப் பொறுத்தவரையில் நான் அந்த வாக்குகளை எதிர்பார்த்து எதையும் செய்யவில்லை – என்றார்.

## திருகோணமலை படகுப் பாதை விபத்து;
## கிண்ணியா நகர சபை தலைவர் நேற்று கைது

திருகோணமலை, நவ 26

கிண்ணியாவில் படகுப் பாதை விபத்தில் 6 பேர் உயிரி ழந்தமையுடன் 20 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம் பவம் தொடர்பில் கிண்ணியா நகர சபைத் தலைவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப் படுவதற்காக அவர் அழைத்துச் செல்லப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய படகு உரிமையாளர் உள்ளிட்ட மூவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் நகர சபைத் தலைவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

அவரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, கிண்ணியா - குறிஞ்சாக்கேணி பாலத்தை ஒன்பது மாதங்களுக்குள் நிர்மாணிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர். டபிள்யூ.டபிள்யூ. ஆர்.பிரேமசிறி இதனைத் தெரிவித்துள்ளார்.



## ஐ.நா. உயர்மட்டக் குழு ஹக்கீமுடன் சந்திப்பு

ஐ.நா. சபையிலிருந்து வருகை தந்துள்ள அதன் மத்திய கிழக்கு, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்குரிய அரசியல் மற்றும் சமாதான விவகாரங்களுக்கான பிரதிச்செயலாளர் நாயகம் காலித் ஹையரி மற்றும் இலங்கைக்கான ஐ.நா. வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர் உள்ளிட்ட உயர்மட்ட தூதுக் குழுவினர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு கொழும்பு – ஷங்கரிலா ஹோட்டலில் நேற்று நடைபெற்றது.

இதன்போது சிறுபான்மைச் சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சமகால அரசியல் சூழ்நிலை என்பன குறித்துக் கலந்துரையாடப்பட்டன.

## யானை தாக்கி மீனவர் மரணம்

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டம், மன்னகண்டல் பகுதியில் யானை தாக்கியதில் மீனவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

கெருடமடுவைச் சேர்ந்த அழகன் கோபால்ராஜ (வயது 64) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வீட்டில் இருந்து இரவு தொழிலுக்குச் சென்றவர் திரும்பவில்லை என்பதால் நேற்று அதிகாலை உறவுகள் தேடிச் சென்றுள்ளனர். இதன்போதே யானை தாக்கி உயிரிழந்த நிலையில் முதியவர் கண்டுபிடிக்கப்பட்டார்.

இது தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

### அரசபடைகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும்
## யாழ். பல்கலையில் மாவீரர்களை நினைவேந்திய மாணவர் சமூகம்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழகத்தில் மாவீரர்களுக்கு நேற்று மலரஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் வருடாவருடம் மாவீரர் வாரத்தை முன்னிட்டு பல்கலைக்கழக மாணவர்களால் மலரஞ்சலி செலுத்துவது வழக்கமாக முன்னெடுக்கும் ஒரு செயற்பாடாக இருந்தது.

இந்நிலையிலேயே தற்போது மாவீரர் வாரம் என்பதால் மாணவர்கள் முழந்தாளில் இருந்து வீரமறவர்களுக்குத் தமது ஆத்மார்த்தமான அஞ்சலியைச் செலுத்தியுள்ளனர்.

பல்கலைக்கழகச் சூழலில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இராணுவப் புலனாய்வுப்பிரிவினரும்மாணவர்களை அச்சுறுத்துகின்ற வகையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் மாணவர்கள் ஆத்மார்த்தமான முறையில் தமது அஞ்சலிகளைச் செலுத்தியுள்ளனர்.

# எத்தேர்தல் இடம் பெற்றாலும் பெரமுன படுதோல்வி அடையும்

## பிரதமரின் முஸ்லிம் விவகார இணைப்பாளர் ஆரூடம்

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் ஊடாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நாம் நிர்வாகியாக்கியுள்ளமை கவலைக்குரியது. வியத்கம உறுப்பினர்களை மக்கள் மத்தியில் காண்பது மிகவும் அரிதாக உள்ளது. இனிவரும் காலங்களில் எத்தேர்தல் இடம் பெற்றாலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன படுதோல்வி அடையும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது என பிரதமரின் முஸ்லிம் விவகார இணைப்பாளர் ஷிராஸ் யூனுஸ் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

நாடு பெரும் பாதிப்புக்களை நோக்கி நகர்கிறது. 51 வருட கால பழைமை வாய்ந்த சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை 50 நாள்களுக்குத் தொடர்ச்சியாக மூடியுள்ளமை தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

வெளிநாட்டுக் கையிருப்பு பிரச்சினை தற்போதைய காலத்தில் மாத்திரம் தோற்றம் பெற்றதல்ல. 51 வருட காலமாகப் பல்வேறு பிரச்சினைகள் சமூகத்தின் மத்தியில் காணப்பட்டன. ஆனால் எந்த அரசாங்கமும் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை தொடர்ச்சியாக 50 நாள்களுக்கு மூடவில்லை.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் விற்கப்பட்டுள்ளதா என்று மக்கள் எண்ணும் அளவிற்கு அரசாங்கத்தின் செயற்பாடுகள் முரண்பட்டதாகக் காணப்படுகின்றன.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளன. பல்வேறு வழிமுறைகளில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உருவப்படத்தை ஏந்தி போராட்டத்தில் ஈடுபடுவதைக் காணும் போது பெரும் வேதனையடைகிறேன்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் ஊடாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகியாக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளார். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலமிக்க அரசாங்கத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மக்களிடம் கோரவில்லை. ஏனெனில் அதன் விளைவு எந்தளவிற்கு பாரதூரமானதாக அமையும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் நகரை அழகுப்படுத்தும் விதமான சுவர்களில் சித்திரம் வரைந்த இளைஞர், யுவதிகள் தற்போது நாட்டை விட்டு வெளியேறுவதற்காக குடிவரவு, குடியகழ்வு திணைக்களத்தின் முன்பாக வரிசையில் உள்ளார்கள். அந்தளவிற்கு நிர்வாகம் பாதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 2 வருட காலத்துக்குள் மக்களின் எதிர்ப்பு தீவிரமடைந்துள்ளது. வியத்கம அமைப்பினரை மக்கள் மத்தியில் காண்பது மிகவும் அரிதாகவே உள்ளது.

இராஜாங்க அமைச்சுக்களை பெற்றுக் கொண்டு மகிழ்வுடன் உள்ளார்கள். மக்கள் கற்றவர்களை அல்ல புத்திசாலிகளை நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்ய வேண்டும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் எதிர்வரும் வருடம் இடம் பெறவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. எத்தேர்தல் இடம் பெற்றாலும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன படுதோல்வியடையும்.

எந்த அரசாங்கத்துக்கும் மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை இனி வழங்கமாட்டார்கள். தேசிய அரசாங்கமே இனிவரும் காலங்களில் தோற்றம் பெறும். - என்றார்.

கிண்ணியாவில் படகு விபத்து தவிர்க்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு சோகமாக இருந்தாலும், பொதுமக்களின் கோபத்தை புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தாலும், உண்மையை சரியான நேரத்தில் மற்றும் அனைத்து விவரங்களுடனும் தெரிவிக்கும் ஊடக உரிமையை எந்தத் தரப்பினரும் கேள்விக்குட்படுத்தவோ அல்லது தடுக்கவோ கூடாது.

ஊடகவியலாளர்களின் தாக்குதலையும், அவர்களின் தொழில் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதையும் சுதந்திர ஊடக இயக்கம் (zgg) ஒரு பாரதூரமான சம்பவமாகக் கருதுவதுடன், அதனை வன்மையாகக் கண்டிக்கிறது.

நாட்டின் எந்தப் பகுதியிலும் தற்போதுள்ள சட்டத்தை அமுல்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு என்பதை வலியுறுத்தும் சுதந்திர ஊடக இயக்கம், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவத்தை உடனடியாக விசாரணை செய்து, அதற்கு காரணமானவர்களை சட்டத்தின் முன்நிறுத்துமாறு அரசாங்கத்தை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஷிராஸ் யூனுஸ் என்கின்ற நபர் பிரதமரின் இணைப்பாளர் அல்லர்

## கீதநாத் காசிலிங்கம் தெரிவிப்பு

ஷிராஸ் யூனுஸ் எனும் நபர் பிரதமரின் முஸ்லிம் விவகார இணைப்பாளராக செயற்படுகின்றார் என வெளியாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு விடயங்கள் தொடர்பான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

ஷிராஸ் யூனுஸ் எனும் குறித்த நபருக்கு பிரதமர் அலுவலகத்தில் எவ்வித பதவிகளும் வழங்கப்பட வில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் பிரதமருக்கு எதிராகவும், பொதுஜன பெரமுனவிற்கு எதிராகவும் குறித்த நபர் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றமையைக் கண்டிக்கிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

# கிண்ணியாவில் ஊடகவியலாளர் மீது தாக்குதல் சுதந்திர ஊடக இயக்கம் கடும் கண்டனம்

கிண்ணியா படகு விபத்து குறித்து செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதை வன்மையாகக் கண்டிப்பதாக சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கிண்ணியாவில் இடம் பெற்ற படகு விபத்தில் நான்கு சிறுவர்கள் உட்பட ஆறு பேரின் உயிரைப் பறித்த சம்பவம் தொடர்பில் செய்தி சேகரிக்கச்சென்ற மூன்று ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கும் சுதந்திர ஊடக இயக்கம் சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணையைக் கோரியுள்ளதுடன் குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.

ஊடகவியலாளர்களான அப்துல் சலாம் முகம்மட் யாசிம்., எச்.எஸ்.எம். ஹலால்தீன், ஏ.எல்.எம்.ரபைதீன் ஆகியோரை 'ஆத்திரமடைந்த பொதுமக்கள்' அவர்களது பணிகளைச் செய்யவிடாமல் தடுத்து, விபத்து நடந்த இடத்தில் இருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.

முஹம்மட் யாசிம் என்பவர் தாக்கப்பட்ட பின்னர் விபத்து தொடர்பான நேர்காணல்கள் மற்றும் உரிய தகவல்கள் அடங்கிய கையடக்கத் தொலைபேசியை கும்பல் பலவந்தமாக எடுத்துச் சென்றது தொடர்பாக கிண்ணியா பொலிஸில் முறைப்பாடு (சிஐடீ (i) 10/291) பதிவு செய்துள்ளார்.

# வாக்காளர் பட்டியல் பெயர் பதிவுக்கு கால அவகாசம்

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடையவுள்ள நிலையில், அந்தத் தேர்தலை நடத்துவதற்கான உள்ளூராட்சி மன்றங்களின் யாப்பு ரீதியிலான பணிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாவட்ட மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கும் அறிவிப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் அடுத்த வருடம் (2022) பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

அதன்படி, உரிய படிவங்கள், அலுவலர்கள் மற்றும் வாகனங்கள் கணக்கெடுப்பு, வாக்களிப்பு நிலையங்களை கண்டறிந்து அவற்றின் குறைபாடுகளை கண்டறிதல் உள்ளிட்ட பணிகளை ஆரம்பிப்பதற்கு, மாவட்ட துணை மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்களுக்கும் அறிவிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி. புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு (2021) வாக்காளர் டாப்பில் பெயரை பதிவு செய்யத்தவர்கள், அது தொடர்பான தகவல்களை டிசெம்பர் மாதம் 03 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்குமாறு, நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவிக்க தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

# நல்லிணக்கத்தை பாதிக்கும் விதமான ஊடக சந்திப்பு; ஞானசாரருக்கு எதிரான சாட்சி விசாரணை மார்ச் 14

இனங்களுக்கு இடையே, நல்லிணக்கத்தைப் பாதிக்கும் விதமாகக் கருத்து வெளியிட்டமை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள, ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணி தலைவரும், பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலருமான கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிரான சாட்சி விசாரணைகளை எதிர்வரும் 2022 மார்ச் 14 ஆம் திகதி ஆரம்பிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்தது.

இது தொடர்பான வழக்கு கடந்த புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

குற்றம் சாட்டப்பட்டுள்ள, கலகொட அத்தே ஞானசார தேரர் இதன்போது மன்றில் ஆஜரானார்.

2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாளொன்றில் கொழும்பில் ஊடக சந்திப்பொன்றை நடத்தி, நல்லிணக்கத்தைப் பாதிக்கும் விதமான வெறுப்பூட்டும் கருத்துக்களை வெளியிட்டார் என ஞானசார தேரர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அஸாத் ஸாலி பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய இடம்பெற்ற விசாரணை களை மையப்படுத்தி, மேல் நீதிமன்றில் ஞானசார தேரருக்கு எதிராக சட்ட மா அதிபரால் இந்த குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு அது கையளிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அந்த வழக்கு விசாரணைக்கு வந்திருந்தது.

இதன்போது கலகொட அத்தே ஞானசார தேரர் சார்பில் சட்டத்தரணி சஞ்சய ஆரியதாச ஆஜரானமையுடன், வழக்கின் கணினி சாட்சிகள் தொடர்பில் ஆராய பிரதிவாதித் தரப்புக்கு அவகாசம் அவசியம் என அவர் மன்றில் குறிப்பிட்டார்.

அதற்கமைய அதற்கான அவகாசத்தை வழங்குமாறு இரகசிய பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிபதி, வழக்கின் சாட்சி விசாரணைகளை 2022 மார்ச் 14 ஆம் திகதி ஆரம்பிப்பதாக அறிவித்தார்.

அன்றைய தினம், சாட்சியம் வழங்க பொலிஸாருக்கு முறைப்பாடளித்த மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலி உள்ளிட்டவர்களுக்கு அறிவித்தல் அனுப்பவும் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.11.2021 இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# கைதான ஈழ அகதிகள் 60 பேரின் விவரங்களை இந்திய அரசுக்கு அனுப்பிவைத்தது மாலைதீவு

## அனைவரையும் பொறுப்பேற்குமாறும் வேண்டுகோள்

(ந.லோகதயாளன்)

தமிழ்நாட்டின் அகதி முகாமில் தங்கியிருந்த வேளை கனடாவுக்குத் தப்பிச் சென்றபோது மாலைதீவில் அகப்பட்ட ஈழ அகதிகள் 60 பேரினது பெயர், விவரங்களையும் மாலைதீவு அரசு, இந்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது.

ஈழத்தில் இருந்து உயிர் தப்பி தமிழ்நாட்டுக்குச் சென்றவர்கள் கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி தமிழ் நாடு முகாம்களில் இருந்து தப்பிச் சென்று நீண்டநாள் மீன்பிடி விசைப்படகு மூலம் கனடாவுக்குப் பயணித்தபோது இயந்திரக் கோளாறு காரணமாக மாலைதீவை அண்டியுள்ள அமெரிக்கப் படைக் கட்டுப்பாட்டுத் தீவில் அகப்பட்டதை 'காலைக்கதிர்' முதலில் செய்தி பிரசுரித்திருந்தது.

அவ்வாறு அகப்பட்டவர்களை அமெரிக்கப் படைகள் மாலைதீவு அரசிடம் கையளித்த நிலையில் அனைவரும் இந்தியாவில் இருந்து புறப்பட்டதால் இந்திய அரசுக்கு மாலைதீவு அரசு 60 பேரையும் பொறுப்பேற்குமாறு கோரி பெயர், விவரங்களை அனுப்பி வைத்துள்ளது.

அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட பெயர், விவரங்கள் ஆங்கிலத்தில் கீழே இணைக்கப்பட்டுள்ளன.

| S.NO | DISTRICT | NAME | AGE | CAMP NAME |
|---|---|---|---|---|
| 1 | TRICHY | AHILAN ARAVINTH | 29 | RAYANUR |
| 2 | TRICHY | ELANGESHWARAN | 40 | RAYANUR |
| 3 | TRICHY | MEHALA | 35 | RAYANUR |
| 4 | TRICHY | THARUN | 8 | RAYANUR |
| 5 | TRICHY | VARNIKA | 6 | RAYANUR |
| 6 | TRICHY | KLINDAN | 24 | RAYANUR |
| 7 | TRICHY | GNANARASANTH | 35 | RAYANUR |
| 8 | TRICHY | SANJAI | 22 | RAYANUR |
| 9 | TRICHY | SULAXSAN | 38 | MANDAPAM |
| 10 | TRICHY | SAGAYARANI | 35 | MANDAPAM |
| 11 | TRICHY | HETLIN | 8 | MANDAPAM |
| 12 | TRICHY | JACKLIN | 6 | MANDAPAM |
| 13 | TRICHY | KAMINI THILAK | 40 | THIRUVATHAVUR |
| 14 | TRICHY | UMA | 30 | THIRUVATHAVUR |
| 15 | TRICHY | DILSANA | 9 | THIRUVATHAVUR |
| 16 | TRICHY | SATHUSAN | 6 | THIRUVATHAVUR |
| 17 | TRICHY | THIRUSELVAM | 38 | THIRUVATHAVUR |
| 18 | TRICHY | ROKINI | 35 | THIRUVATHAVUR |
| 19 | TRICHY | THANISHKA | 10 | THIRUVATHAVUR |
| 20 | TRICHY | HARISHKA | 8 | THIRUVATHAVUR |
| 21 | TRICHY | BASKAR | 32 | THIRUVATHAVUR |
| 22 | TRICHY | BEAULA | 30 | THIRUVATHAVUR |
| 23 | TRICHY | SRUTHIKA | 10 | THIRUVATHAVUR |
| 24 | TRICHY | SWATHIKA | 9 | THIRUVATHAVUR |
| 25 | TRICHY | KIRUTHIKA | 8 | THIRUVATHAVUR |
| 26 | TRICHY | SAGAYANATHAN RONI | 40 | THIRUVATHAVUR |
| 27 | TRICHY | ARASAMMAL | 33 | THIRUVATHAVUR |
| 28 | TRICHY | HANSIKA | 11 | THIRUVATHAVUR |
| 29 | TRICHY | JESMICKAN | 8 | THIRUVATHAVUR |
| 30 | TRICHY | ANDRIO | 4 | THIRUVATHAVUR |
| 31 | TRICHY | DHUBI | 2 | THIRUVATHAVUR |
| 32 | TRICHY | QUEENCY | 5 | VALAVANTHAKOTTAI |
| 33 | TRICHY | RANI | 38 | VALAVANTHAKOTTAI |
| 34 | TRICHY | P.KISHANTH | 29 | VALAVANTHAKOTTAI |
| 35 | TRICHY | SANTHRAN | 18 | VALAVANTHAKOTTAI |
| 36 | TRICHY | ANISHMAN | 23 | THIRUVATHAVUR |
| 37 | TRICHY | SANTHURU | 18 | THIRUVATHAVUR |
| 38 | TRICHY | SIVAKUMAR | 38 | THIRUVATHAVUR |
| 39 | TRICHY | VASANTHAN | 23 | THIRUVATHAVUR |
| 40 | TRICHY | JOHNSAN | 38 | THIRUVATHAVUR |
| 41 | NELLAI | R.VASANTHAN | 40 | GOBALASAMUTHIRAM |
| 42 | NELLAI | G.MANIKANDAN | 24 | GOBALASAMUTHIRAM |
| 43 | NELLAI | S.THASAN(a)SAN |  | GOBALASAMUTHIRAM |
| 44 | ERODE | S.SIVAKUMAR |  | BHAVANISAGAR |
| 45 | ERODE | GOMALA LOJINI |  | BHAVANISAGAR |
| 46 | ERODE | SHAMINI |  | BHAVANISAGAR |
| 47 | ERODE | MAYURIYA |  | BHAVANISAGAR |
| 48 | ERODE | SABINRAJ |  | BHAVANISAGAR |
| 49 | ERODE | PRAJITH |  | BHAVANISAGAR |
| 50 | ERODE | SURESH |  | BHAVANISAGAR |
| 51 | ERODE | SINDHU |  | BHAVANISAGAR |
| 52 | ERODE | CHILDREND |  | BHAVANISAGAR |
| 53 | ERODE | CHILDREND |  | BHAVANISAGAR |
| 54 | ERODE | MARATHADIKUMAR |  | BHAVANISAGAR |
| 55 | ERODE | GOWSICK |  | BHAVANISAGAR |
| 56 | TRICHY | ALPONSE |  | VALAVANTHAKOTTAI |
| 57 | ERODE | SURESH |  | BHAVANISAGAR |
| 58 | ERODE | INTHUMATHI |  | BHAVANISAGAR |
| 59 | ERODE | MERY LAKSANA |  | BHAVANISAGAR |
| 60 | ERODE | DILACKSAN |  | BHAVANISAGAR |

## அமெரிக்க சந்திப்புகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

லிசா ஜே. பீட்டர்சன், உலகளாவிய குற்றவியல் நீதி அலுவலகத்தின் தூதர் மைக்கேல் கோசாக், தெற்காசிய பாதுகாப்பு விவகாரங்களுக்கான இயக்குனர், வெள்ளை மாளிகையில் உள்ள தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான இயக்குனர், பிரதிநிதிகள் சபையின் வெளியுறவுக் குழு மற்றும் செனட் வெளியுறவுக் குழுவின் மூத்த உத்தியோகத்தர்கள், ஷீறீபுணூம் இன் உதவி நிர்வாகி, அமெரிக்க காங்கிரஸின் சட்டமன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர்கள் மற்றும் பிராந்தியத்திற்கான உதவி செயலாளர்கள், நியூயோர்க்கில் ஐ.நா. பொதுச் சபைக்கான அமெரிக்க துணை நிரந்தரப் பிரதிநிதி, நோர்வே, அயர்லாந்தின் ஐ.நா நிரந்தரப் பிரதிநிதிகள், ஐ.நா. அரசியல் துணைச் செயலாளர் அலுவலகத்தின் மூத்த அதிகாரிகளுடன் சந்தித்து பேசினோம்.

இலங்கையில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கத் தலைமைக்கு இந்தக் குழு ஆழ்ந்த பாராட்டுகளைத் தெரிவித்தது. ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இவ்விடயத்துக்கு அமெரிக்க அரசாங்கத்தைத் தொடர்ந்து தலைமைத்துவத்திற்கு அழைப்பு விடுக்கும் அதேவேளையில், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானம் 46/1 ஐ அமுல்படுத்துவதில் திருப்திகரமான முன்னேற்றத்தை இலங்கை மேற்கொள்ளத் தவறியதால், இதில், பன்முக அணுகுமுறையைக் கருத்தில் கொள்ளவும் கேட்கப்பட்டது.

தற்போதைய ஈடுபாட்டின் குறிப்பிட்ட கவனம், நல்லிணக்கத்திற்கான ஒரு முழுமையான அணுகுமுறையை ஊக்கு விப்பதில் ஒரு செயல்திறன் மிக்க அமெரிக்க அரசின் பங்கிற்கு அழைப்பு விடுப்பதாகும்.

சமத்துவம், நீதி, சமாதானம், கண்ணியம் மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு ஆகியவற்றுக்கான தமிழ் மக்களின் நியாயமான அபிலாகைளை நிவர்த்தி செய்வது, மீண்டும் நிகழாமல் இருக்க உத்தரவாதம் அளிப்பதில் முக்கியமானது என்று பிரதிநிதிகள் குழு வலியுறுத்தியது.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் மற்றும் எதேச்சதிகாரம் மற்றும் இராணுவமயமாக்கப்பட்ட ஆட்சியை நோக்கிய அதன் போக்கு, தமிழ், முஸ்லிம், இந்து, கிறிஸ்தவ சமூகங்கள் மேலும் ஓரங்கட்டப்படுவது; மக்கள் எதிர்கொள்ளும் கடுமையான பொருளாதாரச் சிக்கல்கள்; மற்றும் வெளிப்புற கையாளுதல்களுக்கு நாட்டின் பாதிப்பு – அமெரிக்காவிற்கும் முன்னிலைப்படுத்தப்பட்டது.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமது நிலத்தைப் பாதுகாப்பதற்கும் தமது அடையாளத்தைப் பேணுவதற்கும் தமிழ் சமூகம் நாளாந்தம் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பிராந்திய சனத்தொகையை மாற்றியமைக்கும் அரச அனுசரணை முயற்சிகளுக்கு எதிராகப் பேசப்பட்டது. இலங்கை அரசாங்கத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் சிலவற்றின் விவரங்கள் முன்வைக்கப்பட்டமையுடன், சர்வதேச உதவியுடன் அத்தகைய நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கான அவசரம் கோரப்பட்டது.

இலங்கையின் தற்போதைய நிலைமைகளை மாற்றுவதற்கான வாய்ப்புகள் மற்றும் சவால்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன மற்றும் இந்த நெருக்கடியான தருணத்தில் இந்தியாவுடன் இணைந்து அமெரிக்கா ஆற்றக்கூடிய மாற்றமான பாத்திரம் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டது.

நாட்டின் ஆட்சி மற்றும் பொருளாதார சீர்கேடுகளை மேலும் சீர்குலைப்பதைத் தடுப்பது மற்றும் அனைத்து சமூகங்களுக்கிடை யில் சமத்துவம் மற்றும் நல்லிணக்கத்தை வளர்ப்பது வலியுறுத்தப்பட்டு அழைப்பு விடுக்கப்பட்டது. – என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நல்லாட்சியை சகட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிர்மாணிக்கப்பட்ட புதிய விமான ஓடுதளம் மற்றும் ஓடுபாதையை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது–

ஆசியாவின் விமான சேவைக்கான கேந்திரநிலையமாக எமது விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு நாம் 2010ஆம் ஆண்டு தீர்மானித்தோம். நிகழ்காலத்துக்கு ஏற்ற வகையில் விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யவே நாம் விரும்பினோம். அதேபோன்று மேலும் 20 ஆண்டுகளுக்கு பின்னரான எதிர்காலத்தை கருத்தில்கொண்டே இந்த அபிவிருத்தி திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம்.

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின் ஷுவா அபே தலைமையில் 2014ஆம் ஆண்டிலேயே கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி திட்ட ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அபிவிருத்தித் திட்டத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கு முதலீட்டாளர்களுடனும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பத்திலேயே 2015ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது.

விமான நிலைய அபிவிருத்தித்திட்டத்தை இரண்டு கட்டங்களில் நிறைவுசெய்வதற்கு அப்போது திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் இத்திட்டத்தை திட்டமிட்டபடி முன்னெடுத்து செல்லவில்லை. எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே முதல் கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இன்று நாம் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கும் இக்கட்டத்தின் பணிகளை ஆரம்பிப்பதனையும் நல்லாட்சி அரசாங்கம் தாமதப்படுத்தியது. இக்கட்டடத்தின் கூரையின் வடிவமைப்பை மாற்றுவதற்கான தேவை அவர்களுக்கு இருந்தது. இந்த கூரை வடிவமைப்பை மாற்றுவதற்காக மாத்திரம் நல்லாட்சி அரசாங்கம் 661 மில்லியன் ரூபாயை செலவிட்டது. அவ்வாறு திட்டத்தை மாற்ற முயற்சித்தமையாலேயே இரண்டாம் கட்டத்தின் பணிகளை ஆரம்பிக்க தாமதிக்கப்பட்டது.

இன்று முதல் விமான நிலையத்தில் 48 விமானங்களை நிறுத்தி வைப்பதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக ஒரு ஆண்டிற்கு 6 மில்லியன் பயணிகளை கையாளும் திறன் 2023ஆம் ஆண்டளவில் 15 மில்லியன் வரை அதிகரிக்கும்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் மீது விடுதலை புலி பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட கொடூர தாக்குதல் உங்களுக்கு நினைவிருக்கும். அப்போது விமான நிலையத்தில் பணியாற்றியவர்கள் அத்தாக்குதலின் கொடூரத்தை அனுபவித்தனர். அந்த அவசர நிலையின் போது இலங்கைக்கு வந்த விமானங்களை மாற்றி அனுப்புவதற்கு வேறு விமான நிலையமொன்று எமக்கு இருக்கவில்லை.

அதனால் அண்மித்த நாடுகளுக்கு அவ்விமானங்களை அனுப்புவதற்கு எமக்கு நேரிட்டது. அப்போதே மற்றுமொரு விமான நிலையத்தின் தேவை எமக்கு உணரப்பட்டது. அதற்கமையவே கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு மேலதிகமாக மற்றுமொரு விமான நிலையத்தின் தேவை குறித்து எமது அரசாங்கம் கவனம் செலுத்தியது. அதற்கமைய நாம் மத்தள விமான நிலையத்தை நிர்மாணித்தோம் – என்றார்.